இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No./159/News/2019. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 143 | இதழ் : 15 | திகதி : 01.09.2019 | விலை : 30.00

# ஐப்பசி மாதம் - மறைபரப்புக்கான சிறப்பு மாதம் - திருத்தந்தை பிரகடனம்



திருத்தந்தை 15ஆம் பெனடிக்ற் அவர்கள் எழுதிய "அதிமுக்கிய தருணம்" (Maxium Ilud) எனும் திருமடலின் வெளியீட்டின் 100 ஆவது ஆண்டை நினைவு கூர்ந்து இக்காலத்திருத்தந்தை இவ் ஆண்டின் மறைபரப்பு ஞாயிறு தினத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி ஐப்பசி மாதத்தை மறைபரப்பின் சிறப்பின் மாதமாகப் பிரகடனம் செய்துள்ளார்.நீங்கள் திருமுழுக்குப்பெற்று மறைபோதகப்பணிக்காக அனுப்பப்படுகின்றீர்கள் எனும் கருப்பொருளிலே இச்சிறப்பின் மாதம் அமைகின்றது

"அதிமுக்கிய தருணம்" என்கின்ற திருமடலானது முதலாம் உலகப்போரின் பின்னரான மறைபரப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி வெளியிடப்பட்ட திருமடலாக இருப்பதனால் அத்திருமடலின் இறையியல் தத்துவங்களுக்கு செயல் வடிவம் கொடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும், இக்காலத்தில் நம்பிக்கையாளர்களின் இறை நம்பிக்கை வாழ்வானது செயலற்றுக் காணப்படுவதனாலும் இம் மறைபரப்புக்கான மாதம் முக்கியத்துவம் பெறவேண்டுமென்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் முழு உலகத் திருச்சபைக்கும் அறைகூவல் விடுத்துள்ளார்.

திருத்தந்தையின் இவ் வேண்டுகோளுக்கு அமைவாக திருத்தந்தையின் மறைபரப்பு சபை தேசிய ரீதியிலும் மறைமாவட்ட ரீதியிலும் பல செயற்திட்டங்களை வடிவமைத்துள்ளது. அவ்வகையில் எதிர்வரும் செப்டெம்பர் 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமை எல்லாப் பங்குகளிலும் மறைபரப்பின் சிறப்பின் மாதமாக ஐப்பசி 2019ஐ பிரகடனப்படுத்துவதும், ஐப்பசி 1ம் திகதி யாழ் மறைமாவட்டத்தின் குருமுதல்வர் தலைமையில் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் மறைபரப்பு மாத அங்குரார்ப்பணமும், ஒக்டோபர் மாதம் 4ம் திகதி வெள்ளிக்கிழமை மறைபரப்புக்காக செபிக்கும் நற்கருணை ஆராதனை நாளாகவும் அனுஷ்ரிப்பதோடு, ஒக்டோபர் 13ம் திகதி ஞாயிறுதினத்தில் புனித யோசவ்வாஸ் அடிகளாரின் மறை போதிப்புப் பணியைத்தியானிப்பதும் ஒக்டோபர் 20ம் திகதி யாழ் ஆயர் தலைமையில் யாழ் பேராலயத்தில் மறைபரப்புத்தினத்திருப்பலி ஒப்புக்கொடுத்தலும் ஒக்டோபர் 27ம் திகதி மறைபரப்புக்கான விசேட திருச்செபமாலை மற்றும் திருப்பலியுடன் இச்சிறப்புமாதம் நிறைவு காண்பதுமாக நிகழ்வுகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

## புனித மடுத்தீனார் குருமடம் முழுமையாகப் புனரமைப்பு



இலங்கையின் முதலாவது குருமடமாகிய யாழ்ப்பாணம் புனித மடுத்தீனார் குருமடம் தனது 150ஆவது யூபிலி ஆண்டை எதிர் நோக்கி இருக்கும் வேளையில் இக் குருமடத்தை முழுமையாகப் புனரமைப்பதற்கு இலங்கையின் வீடமைப்பு நிர்மாண கலாசார அமைச்சர் கௌரவ சஜித் பிரேமதாச அவர்களால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 10.08.2019 அன்று அமைச்சர் அவர்கள் யாழ்ப்பாணத்திற்கான விஜயம் மேற்கொண்ட போது குருமடத்தின் புனரமைப்பின் ஆரம்பக்கட்ட வேலைகளை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி ப.யோ. ஜெபரட்ணம் அடிகளார், யாழ் அரசாங்க அதிபர், யாழ் மாநகர மேயர், யாழ் பிரதேசச் செயலர் மற்றும் குருக்கள், துறவிகள், குருமட மாணவர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். குருமட அதிபர் அருட்பணி எஸ்.ஜே.சி. பாஸ்கரன் அடிகளார் இந்நிகழ்வுகளை நெறிப்படுத்தியிருந்தார்.

## அல்லைப்பிட்டியில் மொன்போர்ட் சர்வதேச பாடசாலைக்கு அடிக்கல் நாட்டும் வைபவம்



யாழ் மறைமாவட்டத்தின் தீவக மறைக் கோட்டம் போர்க்காலச் சூழ்நிலையால் மிகவும் பாதிப்புற்று அதிகமான இடப்பெயர்வுகளைச் சந்தித்து மீளமுடியாத அளவில் கல்வியிலும், வாழ்வாதாரத்திலும் பெரும் பின்னடைவை எதிர்நோக்கி உள்ளது.

1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் தீவகப் பிரதேசம் கல்வியில் முன்னிலை பெற்றிருந்ததோடு பல கல்விமான்களையும், புத்திஜீவிகளையும் உருவாக்கி இருந்தது. இந்நிலை தொடரவேண்டும் என்ற நன்நோக்குடன் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார். பிரான்சைத் தலைமையமாகக் கொண்டு உலகில் 36 நாடுகளில் தரமான ஆங்கிலக் கல்வியைப் போதிக்கின்ற கத்தோலிக்க திரு அவையின் மொன்போர்ட் சபை (Montfort Brothers) அருட்சகோதரர்களால் நடாத்தப்படும் சர்வதேச ஆங்கிலக் கல்லூரியினை தீவகத்தின் அல்லைப்பிட்டிப் பிரதேசத்திலும் நிறுவ வேண்டுமென இந்தியாவில் இருக்கின்ற புனித மொன்போர்ட் சபையினரோடு தொடர்பு கொண்டதன் விளைவாக 2017 ஆம் ஆண்டு தொடக்கம் அல்லைப்பிட்டியில் மொன்போர்ட் சர்வதேச பாடசாலைக்கான ஆரம்ப கட்டுமாணப் பணிகள் நடைபெற்று வந்தன. கடந்த 19.08.2019 அன்று இப் பாடசாலைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு வெகு சிறப்பாக நடைபெற்றது.

(தொடர்ச்சி 02ம் பக்கம்)

## பருத்தித்துறை புனித வின்சென்ற் டி போல் பந்தி வருடாந்த அமர்வு



பருத்தித்துறைப் பங்கில் புனித வின்சென்ற் டி போல் பந்தியின் பொதுக்கூட்டம் 24.08.2019 பந்தியின் தலைவர் தேவராஜா மரிய சுசிலா அவர்களின் தலைமையில் பருத்தித்துறை பெண்கள் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.இதில் மத்திய சபைத் தலைவர், ஏனைய பங்குகளின் அங்கத்தவர்களும், பருத்தித்துறைப் பங்கின் மாணவர் பந்தியினரும் பருத்தித்துறை பங்கின் பக்திச்சபை அங்கத்தவர்களும், மகிமை அங்கத்தவர்களும் பந்தியினரும் பங்குபற்றினார்கள். இவ்வமர்வில் கரவெட்டிப் பங்கின் பதில் பங்குத்தந்தை அருட்பணி G.ஞானரூபன் அடிகளினால் அருட்சிந்தனை வழங்கப்பட்டது.பிரதம விருந்தினராக அழைக்கப் பெற்றிருந்த மண்ணின் மைந்தனும் புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிபருமான அருட்பணி A.P.திருமகன் அடிகளார் தனது உரையில் புனித வின்சென்ற் டி போலின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாகக் கூறி, பொருளாதார ரீதியாக வறுமைப்பட்டவர்களை மட்டுமன்றி, ஆன்மீக ரீதியாக வறுமை நிலையில் இருப்பவர்களையும் தேடிச் செல்வது, இச் சபை உறுப்பினர்களின் கடமையும், பணியுமாகும் என்று குறிப்பிட்டார்.

இப்பந்தியின் ஆன்மீக இயக்குனரும் பங்குத்தந்தையுமான அருட்பணி A.J.யாவிஸ் அடிகளார், இப்பந்தியின் பணிகளைப் பாராட்டியதுடன், திருச்சபையின் பணிகள் அனைத்தும் இவ்வாறான அன்புப் பணிகளாலேயே அழகு செய்யப்படுகின்றது எனக் கூறினார்.

## "தாய் நாட்டைத் தேவதாய்க்கு அர்ப்பணித்தல்" செப்ரெம்பர் 8ஆம் திகதி ஞாயிறு

### இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் வேண்டுகோள்



பாஸ்கு ஞாயிறு தற்கொலை தாக்குதலின் பின்பு நாட்டிலும் மக்களிடையேயும் ஏற்பட்டுள்ள அச்சத்தைப் போக்க இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவை எமது நாட்டை மோட்ச இராக்கினியின் பாதுகாப்பில் ஒப்படைக்கவும், நாட்டு மக்களைப் பாதுகாக்கவும், நாட்டுத் தலைவர்களின் இக்கட்டான நிலையில் சரியான வழியைக்காட்ட சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்கத் தீர்மானித்ததின்படி செப்ரெம்பர் 8ம் திகதி ஞாயிறு தேவ அன்னையின் பிறந்த நாள் தினத்தில் செபத்தின் நாளாக தாய் நாட்டைத் தேவ அன்னைக்கு ஒப்புக்கொடுக்கும் ஞாயிறாக கடைப்பிடிக்கும்படி அனைத்து மறை மாவட்டங்களில் உள்ள பங்குகளிலும் உள்ள பங்குத்தந்தையர்களிடம் இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவை கேட்டுக் கொண்டுள்ளது. இலங்கை மாதாவுக்கு ஒப்புக் கொடுக்கும் செபத்தை இத்தினத்தில் செபிக்க வேண்டுமெனவும் ஆயர் பேரவையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)**

# எமது எண்ணம்

## குறள் வழியில் நம் வாழ்வு

வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் திருக்குறள் பெருவிழா ஆவணி மாதம் 23ம் திகதி தொடக்கம் 30ம் திகதி வரை வெகு சிறப்பாக நடந்தேறியது. **நாட்டுக்காக ஒன்றிணைவோம்** செயற்திட்டத்தின் கீழ் உலகப் பொதுமறையான திருக்குறளை எல்லோரும் உணரும் வகையில் திருவள்ளுவர் வார நிகழ்வுகள் வடக்கு மாகாணத்தில் இடம்பெற்றுள்ளன.

"தொட்டனைத்தூறும் மணற்கேணி" என்ற தலைப்பில் முல்லைத்தீவு மாவட்டத்திலும், "வேளாண்மை செய்தற்பொருட்டு" என்னும் தலைப்பில் வவுனியா மாவட்டத்திலும், "ஞாலத்தின் மாணப்பெரிது" என்ற தலைப்பில் மன்னார் மாவட்டத்திலும், "முயற்சி திருவினையாக்கும்" என்ற தலைப்பில் கிளிநொச்சி மாவட்டத்திலும், "அறிவு அற்றம் காக்கும்", "கருமமே கட்டளைக்கல்", "மெய்ப்பொருள் காண்பதறிவு" ஆகிய தலைப்புகளில் யாழ் மாவட்டத்திலும் நடைபெற்றது.

இலங்கை ஜனாதிபதியின் எண்ணக்கருவில், வடக்கு மாகாண ஆளுநரின் நெறிப்படுத்தலில், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தால் திருவள்ளுவர் வார நிகழ்வுகள் இவ்வாறு நடந்தேறியுள்ளமை காலச்சூழலுக்குப் பொருத்தமான ஒன்றாகவே உள்ளது.

தமிழின் தலையார்ந்த நூல் திருக்குறள். அதை உலகப் பொதுமறை என அழைப்பதில் தமிழர்களாகிய நாம் பெருமை கொள்கிறோம். உலகில் கிறிஸ்தவ சமயத்தின் பைபிளுக்கு அடுத்தபடியாக அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல் என்ற பெருமை திருக்குறளுக்கு உண்டு. இதனால் திருக்குறள் காலத்தால் அழியாத பெருமையைப் பெறுகின்றது.

தமிழினத்தின் பழம்பெரும் பண்பாட்டையும், பாரம்பரியத்தையும் பற்றி உலகம் வியக்கின்றது என்றால் அதற்கு தமிழ் இலக்கியங்கள் முக்கிய காரணங்களில் ஒன்றாகும். திருவள்ளுவர் தெய்வப் புலவராகப் போற்றப்படுகின்றார். ஒட்டுமொத்த மனிதச் சிந்தனையின் சிறந்த பிழிவு என திருக்குறள் போற்றப்படுகின்றது.

பொதுமானிடத்திற்குப் பொருத்தமான முறையில் தமிழர் வாழ்வில் அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய விதத்தில் குறட்பாக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. எந்த ஒரு இடத்திலாவது ஒரு இனத்தையோ, மதத்தையோ, மதப் பிரிவையோ, அரசையோ, ஆளும் வர்க்கத்தையோ, மொழியையோ வள்ளுவர் குறிப்பிடாமல் அல்லது உயர்த்தியோ, தாழ்த்தியோ பேசாமல் விட்டுள்ளது குறளின் மிகப் பெரிய சிறம்பம்சமாகக் கருதமுடியும்.

தமிழ்ப் பாரம்பரியத்தின்படி ஒரு வாழ்க்கைத் தத்துவ நூல் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு பிரிவுகளை உள்ளடக்கி இருத்தல் வேண்டும். வள்ளுவர் வீடு பற்றிக் கூறாமல் விட்டுள்ளார். அறம், பொருள், இன்பம் பற்றிக் கூறியவர் இந்த மூன்று கட்டங்களையும் தாண்டிச் செல்பவன் தானாகவே வீடு பேறு அடைவான் என்று கூறாமலே விளங்க வைத்துள்ளார்.

கிறிஸ்தவ மத போதனைகளில் காணப்படும் உயரிய மானிட விழுமியப் பண்புகள், வழிகாட்டல்கள் திருக்குறளிலும் எதிரொலித்து நிற்கின்றது. எனவே திருக்குறளை நாம் எட்டத்தில் வைத்துப் பார்க்காது அதிலுள்ள சிந்தனைகளை எமது கிறிஸ்தவ வாழ்வியலோடு இணைத்துப் பார்க்க வேண்டும்.

கிறிஸ்து இயேசு "நானே வழியும் உண்மையும் உயிரும்" எனக் கூறினார். இதற்கு ஈடாக திருக்குறளின் கடவுள் வாழ்த்தில்

**"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தாதார்**
**இறைவன் அடிசேரா தார்"**

என உண்மை இறைவனை பற்ற வள்ளுவன் வழிகாட்டுகின்றான். கிறிஸ்து இயேசுவின் அடிப்படைப் போதனை உன்னை நீ நேசிப்பது போல் உன் அயலானை நேசி என அமைகின்றது. இதனை வள்ளுவன்

**"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையர்**
**என்பும் உரியது பிறர்க்கு"** எனக் குறள் அமைத்துள்ளார். இதனைப் போன்றே மன்னிப்பின் மகத்துவத்தைப் பேச வந்த கிறிஸ்து இயேசு வலது கன்னத்தில் அறைந்தவனுக்கு இடது கன்னத்தையும் காட்டு என்றார். இதனை

**"இன்னா செய்தார்க்கும் இனியவை செய்யாக்கால்**
**என்ன பயத்ததோ சால்பு"** என வள்ளுவம் பேசுகிறது.

**"வானோக்கி வாழும் உலகெலாம் மன்னவன்**
**கோனோக்கி வாழும் குடி"** என்பதில் அரசனின் நீதி வழுவா ஆட்சிமுறை பற்றி வள்ளுவன் எடுத்துக்காட்டுகின்றான். நீதியின் மேல் பசி தாகம் இருக்கவேண்டும் என்ற இயேசுவின் மலைப்பொழிவு இதில் பொதிந்துள்ளதைக் காணலாம்.

"தூய உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களதே" என இயேசு திருவாய் மொழிந்தார்.

**"மனதுக்கண் மாசில னாதல் அனைத்து**
**ஆகுல நீர பிற"** என்ற வள்ளுவனின் வாய்மொழியும் இத்தகைய உள்ளத் தூய்மையை வலியுறுத்தி நிற்கின்றது.எமது ஆன்மீக உணவான திருமறையின் வார்த்தைகளையும், வாழ்க்கைக்கு நெறிகாட்டும் திருக்குறளையும் எமது வாழ்வியல் நூலாகக் கொண்டு வாழ்க்கைப் பாதைக்கு வலுச்சேர்க்க வேண்டியது நமது கடமையாகும். நடைபெறுகின்ற சிறப்பு வாரங்களையும், விழாக்க ளையும், தினங்களையும் ஏனோதானோ என்று பார்வையாளர்களாகவும் இரசிகர்களாகவும், விமர்சிப்பவர்களாகவும் மாத்திரம் இருந்து விட்டுப் போகாது அவற்றினது அர்த்தங்களை, முக்கியத்துவங்களை உணர்ந்தவர்களாய் எமது வாழ்வில் கடைப்பிடிப்போமாக.

அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்

# யாழ் மறைமாவட்ட திருவிவிலிய அறிவு பேச்சுப்போட்டி முடிவுகள் – 2019

மறைக்கல்வி மாணவ, மாணவியர்களின் திருவிவிலிய அறிவை மேம்படுத்தும் நோக்குடன் வருடாந்தம் நடாத்தப்படும் யாழ்.மறைமாவட்ட திருவிவிலிய அறிவு, பேச்சுப்போட்டிகள் ஆவணி மாதம் 03ம் திகதி யாழ் சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலையில் காலை 9.00 முதல் மதியம் 1.30 மணிவரை நடாத்தப்பட்டது.

பிரிவு I முதல் V வரை நடாத்தப்பட்ட இப் பரீட்சையானது மறைக்கோட்டங்களில் நடைபெற்ற பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 184 மாணவ மாண்விகளும், திருவிவிலிய பேச்சுப்போட்டியில் தமிழ் - ஆங்கிலம் 35 மாணவ மாணவிகளும் பங்குபற்றினார்.

இவர்களுள் முதல் மூன்று இடங்களைப் பெற்று பங்கிற்கும், மறைமாவட்டத்திற்கும் பெருமை சேர்த்த மாணவ மாணவியர்களுக்கு எமது மறைமாவட்டத்தின் சார்பில் பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

இவர்களைத் தகுந்த விதத்தில் பயிற்றுவித்து போட்டிகளில் சிறந்த புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள துணைநின்ற பங்குத்தந்தையர்கள், மறை ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளும் பாராட்டுக்களும்.

இவர்களுக்கான பரிசில் புரட்டாதி மாதம் 07ம் திகதி யாழ். மரியன்னை பேராலயத்தில் நடைபெறும் மறையாசிரியர் ஆண்டு விழா திருப்பலியின் நிறைவில் ஆயர் அவர்களால் வழங்கப்படும். இவ்வருடத்தில் இருந்து மறைமாவட்டப் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களுக்கு தகைமை அடிப்படையில் திறமை - 70 - 79, விசேடம் - 80 - 89, அதிவிசேடம் - 90 - 100 என்ற வகையில் சான்றிதழ்கள் பங்குத்தந்தையர்கள் ஊடாக வழங்கப்படும்.

பிரிவு II - தரம் 6,7,8 பிரிவு III - தரம் 9,10,11 இவர்களுக்கான தேசிய ரீதியான போட்டிப் பரீட்சை புரட்டாதி மாதம் 13ம் திகதி வெள்ளிக்கிழமை (போயா விடுமுறை தினம்) அன்று யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் காலை 10.00 மணிக்கு நடைபெறும். பேச்சுப்போட்டி பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

## மறைமாவட்ட ரீதியான திருவிவிலிய அறிவுத்தேர்வு முடிவுகள் –2019

| பிரிவு | பெயர் | பங்கு | புள்ளி | நிலை |
|---|---|---|---|---|
| I (தரம்:3,4,5) | ப. அன்றியூனஸ் | பாசையூர் | 97 | 1ம் இடம் |
| | அ. ஆஷாந் | ஆனைக்கோட்டை | 97 | 1ம் இடம் |
| | அ. வோஷானி | புதுக்குடியிருப்பு | 97 | 1ம் இடம் |
| II (தரம்:6,7,8) | யோ. அபிக்ஷா | இளவாலை | 94 | 1ம் இடம் |
| | ப. மேரி றெக்சலா | குளமங்கால் | 92 | 2ம் இடம் |
| | ப. ஆன் ஜெறால்டின் | மானிப்பாய் | 91 | 3ம் இடம் |
| III (தரம்:9,10,11) | சு.ஆ. தட்சாயினி | பேராலயம் | 99 | 1ம் இடம் |
| | வெ. ஜெரிக்க்ஷா | பேராலயம் | 98 | 2ம் இடம் |
| | ச. விதுசா | கிளிநொச்சி | 97 } | 3ம் இடம் |
| | தோ. டினுசன் | குழமுனை | 97 } | 3ம் இடம் |
| IV 20 வயதின் கீழ் | ஆ. கொலின்சியா | பாசையூர் | 99 | 1ம் இடம் |
| | செ. அபர்னா | மானிப்பாய் | 97 | 2ம் இடம் |
| | மே. மேரி அனுஷியா | அச்சுவேலி | 96 | 3ம் இடம் |
| V 20 வயதின் மேல் | யு. பூங்கோதை | பருத்தித்துறை | 98 | 1ம் இடம் |
| | அ. மேரி றொக்சிகா | பருத்தித்துறை | 98 | 1ம் இடம் |
| | லூ. கியூரி பௌஸ்ரினா | கிளிநொச்சி | 98 | 1ம் இடம் |
| | நி. சுதர்சினி | புதுக்குடியிருப்பு | 98 | 1ம் இடம் |

## மறைமாவட்ட ரீதியான திருவிவிலிய பேச்சுப் போட்டி தமிழ் - ஆங்கிலம் முடிவுகள்

| பிரிவு | மொழி | பெயர் | பங்கு | நிலை |
|---|---|---|---|---|
| II (தரம்: 6,7,8) | தமிழ் | அ. மேரி டிலக்சியா | மாரீசன்கூடல் | 1ம் இடம் |
| | | ஜெ. ஸோபியா மெடோ | பாண்டியன்தாழ்வு | 2ம் இடம் |
| | | யு. ஜீன் அஸ்வினி | தாழையடி | 3ம் இடம் |
| II (தரம்:6,7,8) | ஆங்கிலம் | சி. சரணியா | உரும்பிராய் | 1ம் இடம் |
| | | அ. ஷில்பிகா | உரும்பிராய் | 2ம் இடம் |
| | | வ. ஸ்ருதிகா | மானிப்பாய் | 3ம் இடம் |
| III (தரம்:9,10,11) | தமிழ் | போ. ஷியான் | பாண்டியன்தாழ்வு | 1ம் இடம் |
| | | டோறஸ் தமிழ்ப்பிரியன் | உரும்பிராய் | 2ம் இடம் |
| | | ஸ். அபிநயா | மாரீசன்கூடல் | 3ம் இடம் |
| III (தரம்:9,10,11) | ஆங்கிலம் | அ. சுஜித்தா | பாசையூர் | 1ம் இடம் |

### அல்லைப்பிட்டியில் மொன்போர்ட்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிகழ்வில் யாழ் மறைமாவட்ட ஆயர் மற்றும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், யாழ் மறைமாவட்ட குருமுதல்வர், இந்தியாவிலிருந்து வருகை தந்த சபையின் திருச்சி உயர் மாகாண முதல்வர், ஏனைய அருட்சகோதரர்கள், யாழ் மேயர் ஆனோல்ட் மற்றும் வேலணைப் பிரதேச செயலர், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர், நல்லூர் வலயக் கல்விப் பணிப்பாளர், வேலணைப் பிரதேச சபைத் தலைவர் உறுப்பினர்கள் மற்றும் கல்வி துறைசார் அதிகாரிகள், ஆர்வலர்கள், தீவக உதவிக் கடற்படைக் கட்டளை அதிகாரி, யாழ் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர், தீவக பொலிஸ் பொறுப்பதிகாரி, தீவக மறைக் கோட்டக் குருக்கள், ஏனைய குருக்கள், துறவிகள், அருட்சகோதரிகள் மற்றும் தீவக சிவில் சமூகப் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வினை சபையின் அருட்சகோதரர்கள் தலைமை தாங்கி நடாத்தியிருந்தனர்.

## இறைவனின் பிரசன்னத்தில் 6ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 15 . 06 . 1936



விண்ணில் 07 . 09 . 2013

"நாம் இவ்வுலகில் குடியிருக்கும்
உடலாகிய கூடாரம் அழிந்து போனாலும்
கடவுளிடமிருந்து கிடைக்கும்
வீடு ஒன்று விண்ணுலகில் நமக்குண்டு .
அது மனிதக்
கையால் கட்டப்படாதது.
நிலையானது என்பது நமக்குத் தெரியும்"
(2 கொரி 5:1)

**இரக்கம் நிறைந்த இறைவன் இவருக்கு நித்திய இளைப்பாற்றி அளிப்பாராக.**

AD 54

அமரர்
**திரு.மோசஸ் பெனடிக்ற் ஆசீர்வாதம்**

அன்புடன் நினைகூரும்
மனைவி, உறவினர்கள்.

இல: 182, 2ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்


# நீங்கள் திருமுழுக்குப் பெற்று அனுப்பப்பட்டவர்கள்

## ஒக்ரோபர் 2019 மறைபரப்புக்கான சிறப்பு மாத சிந்தனை - 1

ஆண்டு தோறும் திருஅவையில் ஒக்ரோபர் மாதம் 3 ஆம் ஞாயிறு மறைபரப்பு நாளாக அனுசரிக்கப்படுவது வழக்கம். அந்நாளில் சிறப்புத் திருப்பலி, மன்றாட்டங்கள், பண உதவி செய்தல் போன்ற நிகழ்வுகள் ஊடாக மறைபரப்பு பணியில் இறை மக்கள் தம் பங்களிப்பை ஆர்வத்துடன் செய்வர்.

இவ்வருடம் மறைபரப்பு பணியின் ஒரு வரலாற்று சிறப்பு மிக்க ஆண்டு என்பதனை மனதிலிருத்தி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2017 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 22 ஆம் நாள் மறைபரப்பு தினத்தன்று மூவேளை மன்றாட்டின் போது 2019 ஆம் ஆண்டின் ஒக்ரோபர் மாதத்தை மறைபரப்புக்கான சிறப்பான மாதமாக (Extra Ordinary Month of the Mission - EMM) அனுசரிக்க வேண்டுமென அழைப்பு விடுத்தார்.

இவ்வழைப்பு திருத்தந்தை 15 ஆம் பெனடிற் அவர்களது **"அதிமுக்கிய தருணம்"**



திருத்தந்தை 15ம் பெனடிற்

(Maximum Ilud) என்ற அப்போஸ்தலிக்க திருமடலின் நூற்றாண்டு நிறைவை நினைவு கூரும் நிகழ்வாக அமைய வேண்டும் என்பதே திருத்தந்தையின் விருப்பமாகும். இயேசு விண்ணகம் அடையும் அதிமுக்கிய தருணமாக கருதப்படும் நேரத்தில் "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள்" (மாற்கு 16:15) என்று தம் சீடர்களுக்கு பணித்தார். இயேசுவின் இவ்வார்த்தைகள் மறைபரப்பு பணியின் முதன்மையும் முன்னுரிமையுமாய் கருதுகின்றகோட்பாடாய் விளங்குகிறது. எனவே இவ்வாண்டின் ஒக்ரோபர் மாதத்தை **"நீங்கள் திருமுழுக்குப் பெற்று அனுப்பப்பட்டவர்கள்"** (Baptised and Sent) என்ற விருது வாக்கோடு அனுசரிக்க திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திரு அவையினர் அனைவரையும் அழைக்கிறார்.

Baptised and sent

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இம்மாதத்தினை நாற்கோண பரிணாம வடிவில் செயற்படுமாறு அழைப்பு விடுக்கிறார்.

**முதலாவதாக திரு அவையில் உயிர் வாழும் இயேசு கிறிஸ்துவை தனிப்பட்ட வாழ்வில் அனுபவித்தல்:**

அதாவது திருப்பலி - இறைவார்த்தை தனித்தும், குழுமமாகவும் மன்றாடுதல் போன்றவற்றின் வழியாக இறை மனித உறவை ஆழப்படுத்துதல்.

**இரண்டாவதாக மறைப்பரப்பு பணியாளர்களின் சாட்சிய வாழ்வு :**

அதாவது நற்செய்தியை சுமந்து சென்ற மறைபரப்பாளர்களின் புனித வாழ்வும் மறை சாட்சிய மரணங்களும்.

**மூன்றாவதாக மறை பரப்புக்கான**

## மறைபரப்புக்கான சிறப்பு மாதம் - ஐப்பசி 2019

**உருவாக்கம்:**

குருக்கள் துறவியர் பொது நிலையினர்கள் போன்றவர்களின் விவிலிய, ஆன்மீக இறையியல் போன்ற துறைகளின் வழியே சிந்தனைத் தெளிவு பெற்று மறைத் தூதுவர்களாக உருவாக்கம் பெறுதல்.

**நான்காவதாக மறை பரப்புக்கான பிறர் அன்பு பணி:**

திருத்தந்தைஅவர்கள்உள்நாட்டிலும் பிறநாடுகளிலும் புலம் பெயரந்தவர்களாக எதிர்கொள்ளும் அந்நியர்களை சகோதர சகோதரிகளாக வரவேற்றல். ஏழையர்கள் மீதும் குறிப்பாக அந்நியர்களாக கருதப்படும் புலம் பெயர்ந்தோர்கள் மீதும் பரிவு கொண்டு அவர்களது அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதில் ஈடுபடல்.

நூற்றாண்டுநிறைவைநினைவு கூரும் திருத்தந்தை 15 ஆம் பெனடிற்க் அவர்களது அப்போஸ்தலிக்க மடலான **"அதி முக்கிய தருணம்"** என்னும் மடலை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மறை பரப்பு வரலாற்றின் ஏடுகளில் காலத்தால் அழியாத காவியமாக கருதுகிறார்.

1919 ஆம் ஆண்டு நவப்பர் 30 ஆம் நாள் எழுதப்பட்ட இவ் அப்போஸ்தலிக்க மடல் முதலாம் உலக யுத்தத்தின் பின்புலத்தில் வளர்ந்த அரசியல் மனநிலைகளை எதிர்கொண்டு மறை பரப்பு பணியில் ஈடுபட்ட குருக்கள் துறவியருக்கான ஓர் அறைகூவலாக விளங்குகிறது.

இம்மடல் 100 ஆண்டுகளுக்கு முன்னதாக எழுதப்பட்டிருப்பினும் மறை பரப்பாளர்கள் அதாவது முழுத் திருஅவையுமே கருத்திற் கொள்ள வேண்டிய முக்கிய மனநிலைகளையும், அணுகுமுறைகளையும், கோட்பாடுகளையும் வலியுறுத்தியுள்ளது. முதலாம் உலக யுத்தத்தின்போது ஆட்சியாளர்களது மனங்களில் வளர்த்துக் கொண்ட ஆக்கிரமிப்பு, அதிகாரவெறி, காலனித்துவ மோகம், வல்லரசுகள் என்ற நோக்கங்கள், போட்டி பொறாமை என்பன மறைபரப்பு பணியாளர்களுக்குள்ளும் ஊடுருவி மறைபரப்பு பணியை வெகுவாக பாதித்துள்ளது.

இந்நிலையில் திருத்தந்தை 15 ஆம் பெனடிற் அவர்கள் தமது அப்போஸ்தலிக்க மடலில் மறைபரப்பு பணியாளர்கள் கடைப் பிடிக்க வேண்டிய உயரிய மேன்மையானதும், தூய்மையானதுமான அறிவுரைகளை வழங்கியுள்ளார்.

நற்செய்திப்பணியாளர்கள் தமது சொந்தத் தேசத்தின் அடையாளங்களான மொழி, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றை முன்னுரிமைப்படுத்தி அவற்றை மறைபரப்பு நாடுகளான ஆசிய, ஆபிரிக்க, தென் அமெரிக்கா இனங்களுக்குள்ளும் திணிக்காமல் கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக அல்ல நற்செய்தியின் தூதுவர்களாக தம்மை தோற்றுவிக்குமாறு அறைகூவல் விடுத்துள்ளார்.

மறைபரப்பு பணியாளர்களின் ஆயர்களையும், துறவு சபை மேலாளர்களையும் விழித்து மறைபரப்பாளர்கள் தமது ஆன்மீக வாழ்வில் முதிர்ச்சி காணவும் அவர்கள் தம்மை தக்க முறையிலே ஆயத்தப்படுத்தப்பட வேண்டியவர்கள் என்பதை திருத்தந்தை அவர்கள் வலியுறுத்தியுள்ளார். உதாரணமாக அவர்கள் யாருக்கு நற்செய்தி அறிவிக்க பணிக்கப்பட்டார்களோ அவர்களது தாய் மொழியைக் கற்றுக் கொள்ளவும் அவர்களது கலாசார பண்பாட்டு பாரம்பரியங்களை அறிந்து தெளிந்து அவற்றை மதித்து வாழும் மண்ணுக்குரிய மக்களாக பணிபுரிய பணித்தார்.

மேலும் தமது மடலில் திருத்தந்தை 15 ஆம் பெனடிற்க் அவர்கள் சுதேச குருக்கள் துறவியர்களை அழைத்து அவர்களுக்குஉருவாக்கம் கொடுத்துஅவர்களை சொந்த மண்ணுக்குரிய மறைபரப்பாளர்களாக உருவாக்குவதன் மூலம் மறைபரப்பு பணி தடையின்றி ஒரு சங்கிலித் தொடராக உலகம் முடியும் வரை நீடிக்க வேண்டுமென தூர நோக்குடன் அறிவு புகட்டினார்.

உலகில் நிகழ்காலத்திலும், எதிர்வரும் காலங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் இன்னும் வாழப்பிறக்கும் மக்களை இருளில் இருந்து ஒளிக்கும், சாவில் இருந்து வாழ்விற்கும் பயணிக்க வழி சமைக்கும் பணியாளர்களை உருவாக்க வேண்டும் என்பதே திருத்தந்தையின் கனவாகும். தூரநோக்கோடு மறைபரப்பு பணியில் ஈடுபடக்கூடிய வழிமுறைகளை கையாளுமாறு அறிவுரை கூறும் திருத்தந்தையின் திருமடல் காலத்தால் அழியாத ஒரு காவியமாகும்.

மேலும் திருத்தந்தை 15 ஆம் பெனற்டிக் அவர்கள் தமது மடலில் 'உலகின் கடையெல்லை வரை செல்லுங்கள்' என்ற கிறிஸ்துவின் அறைகூவலுக்கு அமைய சில தனிநபர்களை நினைவு கூர்ந்து, அவர்களின் வீர செயல்களை எடுத்தியம்புகிறார்.

புனித பிரான்சீஸ் சவேரியார் இந்திய எல்லைகளுக்கும், புனித பாத்லோமோடி லாஸ் - காசாஸ் அமெரிக்க எல்லைகளுக்கும் சென்றார்கள் என்ற தனி நபர்களது நற்செய்தி அறிவிப்பு வீர செயல்களை தமது மடலில் நிவைு கூருகிறார். மேலும் இன்னும் பலர் மறை சாட்சியர்களாக தமது உயிரையும் துச்சமென மதித்து இறையாட்சிக்கு சான்று பகர்ந்துள்ளனர். இன்னும் பலர் தமது புனித வாழ்வினால் வரலாற்றில் மக்களின் மனங்களில் நீங்காத நினைவலைகளாக இடம்பிடித்துள்ளனர்.

இப்படிப்பட்ட மேன்மையான கருத்துக்களை திருத்தந்தை 15 ஆம் பெனடிக்ற் அவர்கள் தமது அப்போஸ்தலிக்க மடலில்

அருட்பணி. ஜீவேந்திரா போல் அ.ம.தி
M.Phil, M.A.

பரிந்துரைப்பதனுடான மறைபரப்பு பணியின் மேன்மையான அழைப்பினையும் கிறிஸ்தவ வாழ்வின் இயல்பையும் கோடிட்டுக் காட்டுகிறார்.

*2019 ஆம் ஆண்டின் ஒக்ரோபர் மாதத்தை மறைபரப்புக்கான சிறப்பான மாதமாக அனுசரிக்கும் இப்புனித காலத்தின் சிறப்புக்களையும், இறையியல் சிந்தனைகளையும் தொடர்ந்துவரும்* **"பாதுகாவலனில்"** *எதிர்பார்த்திருங்கள்.*

# அருள் மிகப் பெற்ற மரியே வாழ்க!



புனித மரியன்னையின் பிறப்பு விழா – 08.09.2019

தந்தையின் தூய மாண்பு
தரணியில் பொலிய அன்பு
சிந்தையை விட்டு நீங்காச்
சீரியோன் புகழ் துலங்க
நிந்தைகள் செய்வார் கண்ணும்
நேரருள் சுரக்க மண்ணில்
வந்த தாயாரின் தூய தோற்றம்
வகை பெற மொழிவோம் இங்கு

அன்னம்மாவுள் கருவாய்த் தோன்றி
ஆறொடு மூன்று திங்கள்
மன்னிய புகழ் வளர்க்கும் -
மாசறுமணியாய் முத்தாய்
மின்னிய முகிலாய்த் தங்கி
மேனியாய் உருவெடுத்து
துன்னிய மணிக்குவை போல்
துள்ளிற்றே குழந்தையாக

தூய்மையின் விளக்கமாகத்
தூயவர் வணங்கி நிற்க
வாய்மையின் துலக்கமாக
வாழ்க்கையில் போற்றத்தக்க
தாய்மையின் சிறப்புமாகத்
தாழ்வில்லா மக்களுக்கு
நோய்மையை நீக்குகின்ற
நோக்கோடு பிறந்த தாயார்

கருவாகி வளர்ந்தார்
மக்கள்கலக்கமும் துயரமும் போக்க
உருவாகிப் பிறந்தார்
இறையரசின் மாட்சிமை வளர்ந்திட
தருவாகி நின்றார்
வையகத் தகைமையை வளமாக்கிட
அருளாகி உயர்ந்தார்
அனைவரும் தெளிவாகி நிலை வாழ்வுபெற

அருட் பற்றுக் குழந்தையாக
அனைவருக்கும் மகிழ்வு உண்டாக
இருக்கின்ற குறைகள் அகற்றி
இறையரசை உதயமாக்கிட
கருக்கொண்ட அன்னம்மாவும்
கவின் சுவிக்கீன் அண்ணலாரும்
உருக்கொண்ட குழந்தை மரியாவும்
உயர்திரு பேறுபெற்றார்

கண்ணொளி கொண்டே - எந்தக்
கருத்தையும் சாதிக்கின்ற
விண்ணொளி தனையும் மிஞ்சும்
விழுப்பமும் பொலிவும் கொண்ட
பண்ணொளி மழலை மரியா
பணிவுறு பண்பு வாய்ந்த
தண்ணிய முகத்தை இந்த
தரணியின் மக்களுக்கு காட்டினாரே

வடித்தவன் உருக்கல்லையும்
வகையுடன சமைப்பான் வண்ணம்
பிடித்தவன் ஓவியம் தன்னைப்
பிழையற வரைவான் கற்றோன்
முடித்தவன் இலையானாலும்
முறையுடன் கவி படைப்பான்
படைத்தவன் இறைவன் என்றால்
பழுது அதில் தோன்றுமாமோ
மரியவர் தூய தோற்றம்
மண்ணகத்தில் மலர்ந்த போதே
உரிய நன்மேன்மையாகவும்
உரியவராய்ப் பிறந்தார்
விரிவுற் அவற்றையெல்லாம்
விளக்கிடச் சொற்கள்' இல்லை
தெரிகலா என்போன்றோர் தெரிவித்தல்
அரியதாகும்

வன்னிவாழ் இதயம்
ம.சூசைமுத்து

# நம்பிக்கை வாழ்வாக...

அருட்பணி எம்.நிர்மலராஜ் (செ.நா)

மனித வாழ்வின் பயணம் நம்பிக்கையில் நகர்ந்து கொண்டிருக்கின்றது. நம்பிக்கையிருந்தால் நாளெல்லாம் புது விடியல் என்பர். நம்பிக்கை என்பது இன்று தோற்றதில் நாளை வெற்றி பெறுவோம் எனும் உணர்வு. முடிவு வந்துவிட்டது என்ற நிலையிலிருந்து இன்னும் தொடரும் எனும் நிலைக்கு உயர்வது. கவிஞர் ஷெல்லியின் கூற்றுப்படி "நம்பிக்கை உன் இளமையைப் புதுப்பிக்கும். நம்பிக்கையும் இளமையும் ஒரு தாயின் பிள்ளைகள்" என்றார். நம்பிக்கை என்பது ஒரு சக்தி. கடவுள் என்றும் நம் பக்கம் இருக்கிறார் என உணர்த்துவதும் அச்சக்தி தான். எனவே தான் மகாத்மாகாந்தியின் கூற்றுப்படி "நம்பிக்கை என்பது புயலில் துவண்டு விழும் மெல்லிய மலரல்ல. அது அடி பெயராத இமயத்தைப் போன்றது" என்றார். நம்பிக்கை நகர்வை மூன்று பரிமாணங்களில் நகர்த்த முடியும்

1. "தன்னம்பிக்கை உள்ளவர்களுக்கு எல்லா வழிகளும் திறந்து விடப்படும்"

**ஒருவர் தம்மீது நம்பிக்கை வைப்பது**

"தன்னம்பிக்கை உள்ளவர்களுக்கு எல்லா வழிகளும் திறந்து விடப்படும்" என்றார் அறிஞர் எமர்சன். வாழ்வில் ஏற்படும் எண்ணற்ற துன்ப வேதனை, இன்னல்கள், நெருக்கடிகளில் துவண்டு போகாமல் இருப்பது. அறிவியலின் கணிப்பிப்படி தன்னம்பிக்கை இழந்தவர்கள் தான் அதிகம் தற்கொலை செய்து கொள்கிறார்கள். தன்னம்பிக்கையில் வளர்ந்தவர் தான் விஞ்ஞானி மேரி கியூரி என்ற பெண்மணி.

போலந்து நாட்டில் ஒரு எளிய குடும்பத்தில் பிறந்த இவர் மனித இனத்திற்குப் பயன்படும் ரேடியம் எனும் கதிர் வீச்சுத் தன்மையுடைய மருத்துவ உலகிற்குப் பயன்படும் மூலப்பொருள் ஒன்றைக் கண்டுபிடித்தார்.

"உங்கள் கையில் எல்லாம் உள்ளது உழையுங்கள். கடவுள் கையில் எல்லாம் உள்ளது என்ற எண்ணத்துடன் செபியுங்கள்" என்றார் பெல்ப்ஸ் என்ற அறிஞர். எனவே நன்னம்பிக்கை உணர்வுகொண்ட நிலையில் முயற்சிகளை மேற்கொள்வோம்.

**2. பிறர் மீது வைக்கும் நம்பிக்கை**

இறை நம்பிக்கையின் செயலாக்கமே பிறர் மீது நாம் கொள்ளும் நம்பிக்கையாகும். ஆதிகாலக் கிறிஸ்தவர்களின் வாழ்வு முறை இதற்குச் சான்றாகும். (தி.ப. 2:42-47) நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றித்து இருந்தார்கள். தம்மிடம் உள்ள தைப் பகிர்ந்து வாழ்ந்தார்கள். ஜெரி என்ற அறிவியலாளரின் கூற்றுப்படி "இறைவா உம்மை நம்பினோர் கெடுவதில்லை. இது உண்மை தான். உம்மில் கொண்டிருக்கும் நம்பிக்கையினை அர்த்தமாக்கும் வண்ணமாக அயலாரை ஏற்றுக்கொள்ளும் மனம் தா" என வேண்டும் படி பணித்தார். லாவோ டீசு என்பவரின் கருத்துப்படி "அடுத்தவர் மீது நம்பிக்கை இல்லாதவர் தம் மீது நம்பிக்கை அற்றவர்" எனும் கருத்தை வலியுறுத்துகின்றார். எனவே நம்முடைய அன்றாட வாழ்வின் நிகழ்வுகளில் பிறரை நம்பி வாழ அழைக்கப்பட்டுள்ளோம்.



"உங்கள் கையில் எல்லாம் உள்ளது உழையுங்கள். கடவுள் கையில் எல்லாம் உள்ளது என்ற எண்ணத்துடன் செபியுங்கள்"

**3. இறைவன் மீது வைக்கும் நம்பிக்கை**

இறை நம்பிக்கை தான் நம் வாழ்விற்கு உயிர் கொடுக்கின்றது. நாம் கேட்பதும், விரும்புவதும் இறைவனின் திட்டமென்றால் அவர் நமக்கு செவிசாய்க்கின்றார் (1யோவான் 5:11) இது நாம் அவரில் கொள்ளும் உறுதியான நம்பிக்கை. இறை நம்பிக்கை நம் வாழ்வில் செயலாக்கம் பெறும்போது நமக்கும் புது ஆற்றல் கிடைக்கின்றது. (எசாயா 40:31) மற்றும் பாதுகாப்பு உணர்வும் பெருகுகின்றது. (தி.பா: 146:5) அத்துடன் பெரு மகிழ்ச்சியும் ஏற்படுகின்றது. (உரோமையர் 15:13)

இறை நம்பிக்கை பற்றிப் பல சான்றோரின் கருத்து நம்பிக்கையை தூண்டச் செய்கின்றது. "நம்பிக்கை என்ற உணர்வு இறைவனால் அருளப்பட்ட அன்புக் கயிறு. இந்த அன்புக்கயிறு உலகத்திலுள்ள அனைத்தையுமே ஒன்றையொன்று பிணைத்து நிற்கின்றது" என்றார் சுவாமி விவேகானந்தர். மேலும் இந்தப் பூமியில் நீ பிறக்கும் முன்னே உன் தாயின் தனங்களில் பாலைச் சுரக்க வைத்த இறைவன். நீ இறந்த பின் ஒரு உலகத்தைப் படைத்திருக்க வேண்டும். எனவே மனிதா நம்பிக்கையாய் இரு என்ற கருத்தை ஆழப்படுத்துகிறார் தாகூர்.

எனவே மானிட வாழ்வின் மகத்துவ உண்மைகளை நம்பிக்கையோடு வாழ முற்படுவோம். ஸ்கேந் க்யூவி என்பவரின் கூற்றுப்படி "நம்பிக்கையை உயிரோடு வைத்திரு" என்றார். நாம் எப்படி நம்பிக்கையைப் பெறுகிறோம் என்பது முக்கியமல்ல. நம்பிக்கையோடு இருப்பதுதான் முக்கியமாக எண்ணப்படுகிறது. இளைப்பாறிய திருத்தந்தை 16ம் பெனடிக்ற் 17 ஒக்டோபர் 2011 இல் "நம்பிக்கையின் வாசல்" என்ற மடலில் குறிப்பிட்டவை "அன்பில்லாத நம்பிக்கை பலன் தராது. நம்பிக்கை இல்லாத அன்பு எப்போதும் அவநம்பிக்கை உடையதாகவே இருக்கும். எனவே பெற்றுக்கொண்ட அன்பை அனுபவமாக வாழும்போது நம்பிக்கை வளர்கின்றது" என்று குறிப்பிட்டுள்ளார். எனவே நம்முடைய நாளாந்த வாழ்க்கையில் தன்னம்பிக்கையும், பிறர் நம்பிக்கையும் கொண்டவர்களாகவும் இறை நம்பிக்கையில் அதீத பற்றும் ஆர்வமும் நிறைந்தவர்களாகவும் வாழ முற்படுவோம்.

---

# 200 ஆம் ஆண்டைநோக்கி பயணிக்கும் போர்டோவின் திருக்குடும்ப சபைச் சகோதரிகள்

திருக்குடும்ப சபை 200 ஆம் ஆண்டை நோக்கிப் பயணிக்கும் இவ்வேளையில் அச்சபையின் வரலாற்றுத் தடங்கள் தொடராக வெளிவரவுள்ளது...

அருட்சகோதரி லுமினா போல்ராஜா
திருக்குடும்பக் கன்னியர் சபை



(சென்ற இதழின் தொடர்ச்சி...)

**இறைதிட்டத்தில் பியன்வெனுவின் தொடர் பயணம்**

**நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்**

குரு :இறைவன் காலம் கடந்தும் தமக்கென மக்களை அழைக்கின்றார். தெளிவாகச் சிந்தித்துப் பார்க்க விடை கொடுத்து அனுப்புகின்றார்.

இத்தகைய புனிதமான, உளஅமைதி நிறைந்த,தெளிந்தசிந்தனைஉணர்வுகளுடன் மீண்டும் ஆலயத்தில் பியன்வெனு செபிக்கின்றார். தன்னுடைய உடலுறுப்புக்களின் ஒவ்வொரு அணுவும் புத்துயிர் பெற்று, புதியதொரு ஆன்மீக சக்தி இழையோடுவதை உணர்கின்றார்.

மரியன்னையின் பாதத்தில் அமர்ந்து செபித்த பியன்வெனு தன் அனுபவத்தை இப்படிப் பகிர்கின்றார். " நான் அவளுடைய குரலைக் கேட்டேன். அவள் என்னை அழைத்தாள். எனக்கு வழியைக் காட்டினாள். நான் அனைத்தையும் புரிந்து கொண்டேன்". ஆலயத்தை விட்டுப் படிகளில் காலடி எடுத்து வைத்தபோது ஆலயமணி ஓசை ஒலித்தது. அவ்வொலியின் நாதம் அற்புதமான ஓர் அழைப்பாக அவர் இதயத்தில் ரீங்காரமிட்டது. அக்கணமே இறைவனின் அழைப்புக்கு உடனடியாகப் பதிலளிக்க வேண்டுமென்பதை உண்மையாகவே உணர்கின்றார். ஆலய மணியின் ஓசை ஆண்டவனின் அழைப்புக் குரலின் இன்னிசையாக பியன்வெனுவின் இதயத்தில் எதிரொலித்துக் கொண்டே இருந்தது. இதை ஆழமாக அனுபவித்தவராக 1816ம் ஆண்டு இறைபணியாற்ற குருமடத்தில் இணைகின்றார்.

**அழைப்பின் அனுபவம்**

இசியில் உள்ள குருமடத்தில் பயிற்சி பெறும் காலத்தில், குயவன் கையில் களிமண் எவ்விதமாகப் பதப்படுத்தப்பட்டு உருவம் பெறத் தன்னை நெகிழ்ந்து கொடுக்கின்றதோ, அவ்விதமே பியன்வெனுவும் தன்னை உருவாக்க முழுமையாகத் தன்னை இறைவன் கையில் விட்டுவிட்டார். இவ்விதமாக இறைவனுக்கும், அதிகாரிகளுக்கும், உடன் குரு மாணவர்களுக்கும் தன்னை விட்டுக் கொடுத்து வாழ இவரிடம் விளங்கிய தன் தேவைகளைச் சுருக்கிக்கொள்ளும் மென்மையான பண்பும், நற்செய்தி ஏழ்மையும் துணை நின்றதுடன், உலகப் பொருட்கள் மட்டில் ஏற்பட்ட குபைாடுகளையும், இல்லாமைகளையும் துச்சமென மதிக்கவும் செய்தன.

1816ம் ஆண்டு மார்கழித் திங்களில் குருத்துவ மாணவனுக்குரிய உடையையும், குருபட்டத்தையும் பெற்றுக் கொண்டதிலிருந்து "தாம் இறைவனுக்கே சொந்தம்" என்ற மேலான நோக்கோடு அவரது அருட்கொடைகளைக் பெற செபத்திலும், பரிகார முயற்சிகளிலும் நெடுநேரம் செலவிட்டார். தன் தகுதியற்றதன்மையை உணர்ந்து, ஏற்றுக்கொண்டு இறையருளுக்காக எந்த வேளையும் தன்னைத் திறந்து வைத்திருப்பதன் மூலம் இறைவனோடு தனிப்பட்ட முறையில் ஐக்கியத்தில் வளர்ந்து வந்தார்.

இசியில் வாழ்ந்தபோது, இவரை முற்று முழுதாக ஆட்கொண்ட நிரந்தரமான, முன்னோரளித்த செல்வம் ஒன்று உண்டென்றால் அது "திருக்குடும்பப் பக்தியாகும்." மனிதவதார மறைபொருளின் மகத்துவத்தையும், மரியன்னையின் சிறப்பையும், அவருடைய உரிமையையும் சிறப்பாகக் கண்டு கொண்டதுடன், இயேசு, மரி, சூசை என்போருடன் அன்புக் கயிற்றால் பிணைக்கப்பட்டு ஒன்றிப்பை ஏற்படுத்திய தருணங்கள் இசியிலுள்ள சிற்றாலயத்திலேயே இடம் பெற்றன.

இவ்வாலயத்திலுள்ள மரியன்னையின் திருச்சுரூபம் இவரோடு பேசி, இவரது உள்ளத்தை உருமாற்றியதே இப்பிரியத்துக்கு அடிப்படைக் காரணமாகும்.

பியன்வெனு மரியன்னையில் கொண்டிருந்த பிரியத்தை இவருடைய உடன் குரு மாணவன் சாட்சியமாகப் பகருகின்றார்.

"குரு மாணவருள் மிகச் சிறந்த ஒருவராக பியன்வெனு விளங்கினார். இறைவன், மரியன்னை, ஆன்மாக்களைக் காப்பதில் இன்பம் என்பனவே அவருடைய உரையாடல்களாய் இருந்தன. உலகின் பெரும்பான்மையான மக்களின் துன்பநிலை, மனித அறிவில் புத்திக்கூர்மை, சமயஞானத்தின் முட்டாள் தனம், நித்தியகதி பற்றிய சிந்தனையின்மை என்பவையே இவருடைய சிந்தனைப் பகிர்வுகளாக இருந்தன.

லொறற்றோ, வரப்பிரசாத மாதா இவர் தேடும் புகலிடமாகும்".

(தொடரும்....)

# வழிபாடு வாழ்வாகுமா!!



அருட்பணி ச.ஜே.சுரேந்திரராஜா அ.ம.தி
(sjsurenomi@gmail.com)

(சென்ற இதழின் தொடர்ச்சி....)

இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகளில் திருவழிபாடு எனும் கொள்கைத் திரட்டு இல: 10 கூறுகிறது "திருவழிபாடு திருஅவையின் செயல் முழுவதுமே நாடி நிற்கும் சிகரமாக அமைந்துள்ளது. அத்துடன் திருஅவையின் ஆற்றல் அனைத்திற்கும் அது ஓர் ஊற்றாகவும் உள்ளது". கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் சிகரமுமாய் இருப்பது வழிபாடு என்று ஆணித்தரமாய் கூறுகின்ற போது வழிபாட்டின் மூலம் தான் நாம் எம்மை புதுப்பித்து கொள்கின்றோம். எமது நிலை வாழ்வை, நிறை வாழ்வை நோக்கிய பயணத்தில் எமக்கும் இறைவனுக்கும் இடையில் இருக்கின்ற உறவை புதுப்பித்து கொள்கின்றோம். இறைவனை மாட்சிப்படுத்தவும், இறைவார்த்தையில் இறைவனின் அழைப்பை உணரவும், மீட்புச் செயலை நிறைவேற்றுவதில் பங்களிக்கவும், பீடத்தில் எம்மையும் இணைத்து இறைவனோடு உடைக்கப்படவும், தூய ஆவியின் துணையோடு எம்மைத் தூய பலியாக ஒப்புக்கொடுக்கவும், கிறிஸ்துவோடு எம்மை ஒரே உடலாக இணைத்துக்கொள்ளவும் வழிபாடு எம்மை அழைத்து நிற்கின்றது. இதுவே வழிபாட்டின் நோக்கமும், அழைப்பாகவும் அமைகின்றது. திருஅவைக்கு தேவையான சக்தியை திருவழிபாட்டில் இருந்து தான் பெற்றுக்கொள்ள முடிகின்றது. வழிபாட்டை நோக்கி தான் திருஅவையின் அனைத்து செயற்பாடுகளும் திருப்பப்பட்டுள்ளது.

வழிபாட்டில் நம்பிக்கை அடிப்படையாக கொள்ளப்படுகின்றது. நம்பிக்கை தான் இறை அனுபவத்தை தாங்கிச்செல்ல தூண்டுகின்றது. வாழ்வை கொடுக்கின்றது. உரையாடும் அதே இறைவன் மனிதனின் உள்ளங்களில் தொடர்ந்தும் இருப்பதும் அந்த இறை அனுபவத்தை சுவைப்பதும் திருஅவையின் வாழும் பாரம்பரியத்தில் மனிதத்தின் வாழ்வும் சமாந்தரமாக பயணிக்கின்றது.

மனிதன் பிறந்தாலும் அவனுக்கு திருமுழுக்கு கொடுக்கின்றோம். அவன் இறந்தாலும் இறுதி அஞ்சலி செலுத்துகின்றோம். ஆகவே அவன் பிறந்தாலும் இறந்தாலும் அவனது வாழ்வு வழிபாட்டுக்குள் வாழப்படுகின்றது. மறை பொருளாய் இருந்தவர் மனிதனாக தோன்றி மானிடருக்கு வெளிப்படுத்தினார். வழிபாட்டு இறையியலாளர் ஓடோ காசேல் இதை மறைபொருள்-இறையியல் என்று கூறுவார். இம் மறைபொருள் - இறையியல் தான் வழிபாட்டின் ஆரம்பம். "கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார். எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார். ஆகவே இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடுவர். தந்தையாம் கடவுளின் மாட்சிக்காக 'இயேசு கிறிஸ்து ஆண்டவர்' என எல்லா நாவுமே அறிக்கையிடும்" (பிலி 2:6-11.) இறைவன் மனிதனோடு மனிதனாக உரையாட ஆரம்பிக்கின்றார்.

திருவிவிலியத்தில் வழிபாடு விடுதலை பயணம்: 7:16 'பாலைநிலத்தில் எனக்கு வழிபாடு செய்யும்படி என் மக்களைப் போகவிடு' என்று மோயீசன் வழியாக இறைவன் உரைத்தது நான்கு தடவைகள் விடுதலை பயண நூலிலே காணப்படுகின்றது. (8:1 9:1 9:13 10:13) இஸ்ராயேல் மக்களின் சுதந்திரமான இறைவழிபாடு தான் இறைவன் விரும்பிய மக்கள் விடுதலை. இதற்காக தான் பாரவோன் மன்னனிடமிருந்து மக்களை விடுவித்து வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு கொண்டு சேர்க்க இறைவன் முயற்சிக்கிறார். 'ஆனால் இந்நாட்டிலேயே உங்கள் கடவுளுக்குப் பலியிடுங்கள்' 8:25 என்னும் பிடிவாத எண்ணம் கொண்ட பாரவோன் இஸ்ராயேல் மக்கள் தங்கள் இறைவனை வழிபடாமல் தடுத்து வைக்கும் போது 'பாலை நிலத்தில் நாங்கள் மூன்று நாள்கள் வழிநடந்து, எங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கு, அவர் எங்களுக்குச் சொல்வதுபோல் பலியிடுவோம்' 8:27 என்பதன் ஆழமான பொருள் உணர்த்தப்படுகின்றது. 'ஆண்டவருக்கு எப்படி வழிபாடு செலுத்துவோம் என்று நாங்கள் அங்குச் செல்லும்வரை எங்களுக்கே தெரியாது' 10:26 என்று இஸ்ராயேல் மக்கள் குரல் எழுப்புகின்ற போது இறைவன் விரும்புவது தன்னை மக்கள் வழிபட வேண்டும் என்பதே. மக்களின் ஆர்வமும் அவாவும் இதிலிருந்து தெளிவுபடுகின்றது.

இஸ்ராயேல் மக்களுக்கு வாக்களிக்கப்பட்ட நாட்டை கொடுப்பதும், அவர்களை அடிமைத்தனத்தில் இருந்து மீட்பதும் விடுதலை பயண நூலின் சாரம்சமாக அமைந்து விடுகின்றது. 'பாலும் தேனும் பொழியும் நல்ல பரந்ததோர் நாட்டிற்கு, அதாவது கானானியர், இத்தியர், எமோரியர், பெரிசியர், இவ்வியர், எபூசியர் வாழும் நாட்டிற்கு அவர்களை நடத்திச் செல்லவும் இறங்கிவந்துள்ளேன்' (விப: 3:8) என்ற இறைவனின் குரல் உணர்த்தும் அர்த்தம் என்னவென்றால் வாக்களிக்கப்பட்ட நாட்டை கொடுப்பது என்பது இறைவனுக்கு பலிப்பீடமைத்து அவருக்கு வழிபாடு செய்வதாகும். இஸ்ராயேல் மக்கள் தங்களுக்கு பணித்தபடியே சீனாய் மலையிலே இறைவனை வழிபட்டனர். வழிபாடு என்ன என்பதை ஆழமாக கற்றுக்கொண்டனர். (வி.ப :24) ஆகவே வழிபாடுகள் நடத்த இறைவன் விரும்ப வேண்டும். இறைவன் தனது சட்டங்களையும் நியமங்களையும் அளிக்கவேண்டும். இவற்றை நிறைவேற்ற இறைவனால் நியமிக்கப்பட்ட, தெரிவு செய்யப்பட்ட தலைவர்கள் வேண்டும். இன்றும் நாம் கொண்டாடும் வழிபாடுகள் இதனடிப்படையில் நடைபெறுகின்றன. இதற்கு அடிப்படை இறைவனின் வெளிப்பாடே.

இறைவனை திருப்திப்படுத்துவது வழிபாடாக இருக்க முடியாது. மனிதனையும் அவனது அனுபவங்களையும் கொண்டு இறைவனை தேட முற்படும் போது அவனது வரையறை அவனது இறை அனுபவத்தை பெற்றுக்கொள்வதில் தடையாக அமைந்துவிடுகிறது. சொற்கள் வரையறைக்குட்பட்டது. இதனால் இறைவன் - அனுபவம் பற்றி எடுத்துச் சொல்வது வரையறைக்குட்படுகின்றது. நாம் இன்னும் இறைவனை தொட்டுப்பார்க்க தான் விரும்புகின்றோம். விடுதலை பயணம்: 32ம் அதிகாரம் இவற்றை அழுத்தி கூறுகின்றது. இறைவன் - அனுபவம் என்பதில் முதலாவது நம்பிக்கை அடிப்படையாக வேண்டும்.

**திருப்பலி**

நான் குருவாக திரு நிலைப்படுத்தப்பட்ட அன்றைய நாளிலே ஒரு நண்பர் எனக்கு ஒரு குறும் செய்தி ஒன்றை அனுப்பி வைத்திருந்தார். அதிலே இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது: "புதிய குரவரே எனது வாழ்த்துக்கள்! ... உனது வாழ்நாளிலே நீ செய்ய வேண்டிய முக்கியமானதொன்று இருக்கின்றது. என்னை போல் நீயும் ஒவ்வொரு நாளும் திருப்பலி ஒப்புக்கொடுக்க வேண்டும். நான் பலமுறை விமானத்திலும் கூட திருப்பலி ஒப்புக்கொடுத்திருக்கிறேன்" என்று ஒரு அறிவுரையாக கூறி முடித்தார்.

வழிபாட்டு இறையியலை படித்த எனக்கு ஒரு போடு போட்டது. திருப்பலியை எவ்வாறு விமானத்தில் கொண்டாடமுடியும் என்று சற்றுச் சிந்தித்துப் பார்த்தேன். மேலே குறிப்பிட்டதை போல நமக்கேன் வீண் வம்பு என்கின்ற ஒரு எண்ணமும் தோன்றிற்று. அப்போதுதான் எனக்கு கற்றுக்கொடுத்த ஒரு ஆசானின் விளக்கம் ஞாபகம் வந்தது. ஒவ்வொரு நாளும் திருப்பலியை ஒப்புக்கொடுப்பது ஒரு குருவானவரின் தார்மீகக் கடமை. அது உரிமையும் கூட. ஆக இவ்வாறான சந்தர்ப்பங்களில் எமது பணியின் விவேகத்தை (Pastoral Prudance) பயன்படுத்த வேண்டும். *(தொடரும்...)*

# ஞானத்தின் மேன்மை



ஞானம் - ஆற்றல் கொண்டது, அறிவுடையது!
ஞானம் - தூய்மையானது, தனித்தன்மை வாய்ந்தது!
ஞானம் - பல்வகைப்பட்டது, நுண்மையானது!
ஞானம் - உயிரோட்டம் உள்ளது, தெளிவுமிக்கது!
ஞானம் - மாசுபடாதது, வெளிப்படையானது!
ஞானம் - கேடுறாதது, நன்மையை விரும்புவது!
ஞானம் - கூர்மையானது, எதிர்க்க முடியாதது!
ஞானம் - நன்மை செய்வது, மனிதநேயம் கொண்டது!
ஞானம் - நிலைபெயராதது, உறுதியானது!
ஞானம் - வீண்கவலை கொள்ளாதது, எல்லாம் வல்லது!
ஞானம் - அறிவும், தூய்மையும், கொண்ட
உள்ளங்களை ஊடுருவிச் செல்வது!
ஞானம் - அசைவுகள் எல்லாவற்றையும் விட விரைவானது!
ஞானம் - கடவுளின் ஆற்றலில் இருந்து புறப்படும் ஆவி!
ஞானம் - எல்லாம் வல்லவரின் மாட்சியில் இருந்து எழும் தூய வெளிப்பாடு!
ஞானம் - என்றுமுள்ள ஒளியின் சுடர்!
ஞானம் - கடவுளது செயல்திறனின் கறைபடியாத கண்ணாடி!
ஞானம் - தலைமுறைதோறும் தூய ஆன்மாக்களில் நுழைகின்றது!
ஞானம் - கதிரவனை விட அழகானது!
ஞானம் - விண்மீன் கூட்டத்திலும் சிறந்தது!
ஞானம் - ஒளியைக் காட்டிலும் மேலானது!
ஞானம் - ஒருகோடி முதல் மறுகோடி வரை ஆற்றலோடு செல்கிறது!
ஞானம் - எல்லாவற்றையும் முறையாக ஒழுங்குபடுத்துகின்றது!
ஞானத்தை தீமை மேற்கொள்ளாது

அ.ஜஸ்ரின் ஷறோன்
நானாட்டான்

# இருளில் இழப்பு

ஒரு நாள் அதிகாலை வேளையில் சூரிய உதயத்திற்கு முன்பு ஒருவன் ஆற்றுக்குச் சென்றான். ஆற்றின் கரையில் காலடியில் ஏதோ ஒன்று தட்டுப்படுவதை உணர்ந்தான். அது கற்கள் நிறைந்த ஒரு சிறு மூட்டையாக இருக்கக் கண்டான். அவன் அந்த மூட்டையை எடுத்தான். சும்மா இருந்த அவன் அந்த மூட்டையிலிருந்து ஒரு கல்லை எடுத்து ஆற்று நீரில் வீசினான். அதன் பின் அடுத்த கல்லை வீசினான். பின் மற்றொரு கல்லையும் வீசினான். செய்வதற்கு வேறொரு வேலையும் இல்லாததால் கற்களை எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக நீரினுள் எறிந்து வந்தான்.

மெதுவாக சூரியன் உதிக்கத் தொடங்கியது. எங்கும் வெளிச்சம் வந்தது. அதற்குள் அவன் ஒரேயொரு கல்லைத் தவிர மற்ற எல்லாக் கற்களையும் வீசி எறிந்தான். கடைசிக் கல் மட்டும் அவனது உள்ளங்கையில் இருந்தது. அவன் அதை நல்ல வெளிச்சத்தில் பார்த்தபோது அது ஒரு இரத்தினக் கல்லாக காட்சியளித்தது. இருட்டில் அந்த மூட்டையிலிருந்த இரத்தினக் கற்கள் முழுவதையும் அவன் வீசி எறிந்திருந்தான். அவனை அறியாமலேயே அவன் எல்லாவற்றையும் இழந்துவிட்டான். இப்படித்தான் நாமும் இருட்டில் இருப்பதால் வாழ்வில் எத்தனையோ இரத்தினக் கற்களை எறிந்துவிட்டோம். **வாழ்க்கையைத் தொலைக்காதீர்கள். சந்தர்ப்பம் நம் வீட்டுக் கதவைத் தட்டும் போது இது என்ன சத்தம் என்று குறைபட்டுக் கொள்ளாதீர்கள். தாலந்து உவமை வாழ்வின் படிப்பினையாகட்டும்.**

# இறைவன் தந்த வரம்

பலகோடி பிறப்பெடுத்தாலும்
மனிதப் பிறவிக்கு ஈடாகாத வரம்
தந்த தந்தாய் உன் பெயர்
போற்றப்படுவதாக!

ஐந்தறிவு ஜீவன்களில்
என்னைப் பிரித்து ஆறறிவு படைத்ததின்
அர்த்தம் புரிகிறது எனக்கு
ஏனெனில் என் மேன்மைக்காய்

உன் அன்பு மட்டும் போதும்
என் வாழ்வு சிறக்க
பலரின் வார்த்தை பகிடியாய் வந்தாலும்
பண்பானவழிநடத்தல்
எனக்கான பயனாகும்

கண்ணீரில் நான் கரைந்த போதும்
உன்னோடு எப்போதும் நானென்பாய்
கதை மறந்து உன்னோடு நானாவேன்
உனக்கான புகழ்ப்பா இதுவாகும்.

பி.பொபிதரன்
புனித மடுத்தினார் குருமடம்
யாழ்ப்பாணம்.




# சுக நல சேவையில் 90 ஆவது அக
# இலங்கை திருச்சி

## யாழ் மறைமாவட்ட ஆயரின் வாழ்த்து



திருச்சிலுவைக் கன்னியர் இலங்கை மண்ணில் கால் பதித்து சுகநல சேவைப் பணியாற்றி 90 ஆண்டுகளை நிறைவு செய்கின்ற வேளை திருச்சிலுவைக் கன்னியர் சபை முதல்வர் அருட்சகோதரி றொபினா மற்றும் இலங்கை மண்ணில் பணியாற்றும் திருச்சிலுவைக் கன்னியர்சபைச் சகோதரிகள் அனைவருக்கும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கிறோம். இவர்களின் பணியை இங்கு ஆரம்பித்து அரும்பணியாற்றி மறைந்து போனவர்கள் நன்றியுடன் நினைவு கூரப்பட வேண்டியவர்கள். இலங்கை மண்ணில் இவர்கள் கால் பதித்து சுகநல சேவையாற்றி 90 ஆண்டுகளை நிறைவு செய்கின்ற வேளை இவர்களின் சபை சர்வதேச ரீதியாக சுவிட்சர்லாந்து நாட்டில் ஸ்தாபிக்கப்பட்ட 175 ஆவது ஆண்டையும் கொண்டாடுகின்றனர் என்பது சிறப்புடன் நோக்கப்பட வேண்டியதாகும்.

1930 ஆம் ஆண்டு இலங்கை மண்ணில் கால் பதித்து. யாழ் மறை மாவட்டத்தின் ஊர்காவற்துறையில் சுகநல பணிகளை ஆரம்பித்து படிப்படியாக 1934ம் ஆண்டு கொழும்புத்துறையில் முதியோர் இல்லத்தையும். 1954 இல் குருநகரில் சுகநல நிலையத்தையும் நிறுவி அரும்பணியாற்றி வருகின்றனர். திருச்சிலுவைக் கன்னியர் ஊர்காவற்துறை வைத்தியசாலையில் சுகநல பணிகளை ஆற்றிக் கொண்டிருந்தபோதே நான் பிறந்ததாக எனது அன்னை நன்றியுடன் தெரிவித்திருக்கிறார்.

1938 ஆம் ஆண்டு யாழ் அரசாங்க பொது வைத்தியசாலையில் பணிகளைத் தொடங்கிய இவர்கள் 25 ஆண்டுகள் அங்கு பணியாற்றியுள்ளனர் என்பது பலரும் அறியாத உண்மையாகும். யாழ் மறை மாவட்டத்தில் மட்டுமல்ல இலங்கை முழுவதிலும் இவர்களின் பணி இன்று பரவியுள்ளது என்பது பாராட்டப்பட வேண்டியதாகும்.

இலங்கை மண்ணில் சுகநலபணிகள் முதன்மை பெற்று பணி புரிபவர்களில் திருச்சிலுவைக் கன்னியரும் இடம் பெறுகின்றனர் என்பதில் ஐயமில்லை. திருச்சிலுவைக் கன்னியர் சுகநலபணிகளில் சிறப்புப் பெற்று ஆற்றி வரும் சுகநலபணிகள் இனிதே தொடர இறையாசீர் வேண்டி வாழ்த்துகிறோம்.

கிறிஸ்துவிலும் மரியன்னையிலும் பக்தியுள்ள.

**பேரருட்திரு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்**

திருச்சிலுவை மகிமை விழாவினைக்
இன்றைய நாளிலே 18ம் நூற்றாண்டுக்
மூன்று இளம் பெண்களை நினைவு கூ
யில் அவர்கள் வித்திட்ட விதையின்
சிலுவைக் கன்னியர் சபையானது சு
லுள்ள மென்சிங்கன் என்னும் இடத்தில்
ஐப்பசித் திங்கள் ஆரம்பிக்கப்பட்டது
யானது கிளை விட்டு நான்கு கண்டங்க
நாடுகளில் பரந்து காணப்படுகி
மூன்று சுவிட்ஸ் அருட்சகோதரிகள் 193
மாதம் ஊர்காவற்துறையில் தம் பணி
தனர். இதன் பலனாக இலங்கையின்
மாவட்டங்களிலும் பாகிஸ்தானில் ஓர்
திலும் தன் கிளைகளைப் பரப்பி சேவ
ஓர் விருட்சமாகத் திகழ்கின்

புரட்டாதி 14ம் திகதி எம் தாய்த் திருச்சபையானது திருச்சிலுவையின் மகிமையை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றது. திருச்சிலுவைக் கன்னியர்களாகிய எமக்கு அந்நாள் மகிழ்ச்சியான நாள். அன்று எமது சபையின் திருநாள். இவ்வருடம் அதிலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மகிழ்ச்சியான நாள். திருச்சிலுவையின் மகிமையோடு. வரலாற்றில் இடம் பெற்ற இரண்டு முக்கிய நிகழ்வுகளை நாம் கொண்டாடுகின்றோம். அதாவது.

சர்வதேச ரீதியாக எமது சபை சுவிட்சர்லாந்தில் ஸ்தாபிக்கப்பட்ட 175 ஆவது ஆண்டையும். இலங்கையில் எமது சபை சுகநல சேவையில் 90 ஆவது ஆண்டுக்குள் காலடி எடுத்து வைப்பதையும் நாம் நினைவு கூர்கின்றோம்.

### 1844 ஐப்பசித் திங்கள் 17ம் நாள் திருச்சிலுவைக் கன்னியர் சபையானது ஆசிரியப் பணிக்கென அடித்தளமிடப்பட்டது



பிரான்சியப் புரட்சியை அடுத்து ஏற்பட்ட துன்பகரமான அல்லது வேதனைக்குரிய சூழ்நிலையே. புதிய ஒரு துறவற சபை அடித்தளமிடுவதற்கு நல்ல ஒரு உறுதியான தளத்தைப் பெற்றுத் தந்தது என்று கூறினால் அது மிகையாகாது. அக்கால கட்டத்தில் நம்பிக்கையும். நீதியும். அறமும். ஒழுக்கமும் சமுதாயத்தில் கேள்விக்குரிய விடயங்களாகக் காணப்பட்டன. சுவிட்ஸ்லாந்தில் கத்தோலிக்க திருச்சபையானது பல இடர்களைச் சந்தித்தது. இப்படியான சூழ் நிலையில் தூரநோக்குடன் சிந்தித்த கப்புச்சின் சபையைச் சேர்ந்த அருட்தந்தை தியோடோசியஸ் அவர்கள். மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த விரும்பினார். மக்களுக்கு கல்வியும் உருவாக்கமும் அவசியம் என்பதைப் புரிந்து கொண்டார். அது மட்டுமன்றி. இன்றைய யுவதிகள் நாளைய இல்லத்தரசிகள். குடும்பப் பொறுப்புக்களைத் தம் தோள்களில் தாங்கப் போகின்றார்கள் என்பதை உணர்ந்து கொண்டார். இளம் யுவதிகளுக்கு சரியான வழிகாட்டல் வழங்கப்பட்டால் எதிர்கால சமுதாயத்தில் நம்பிக்கையையும் ஒழுக்கத்தையும் கொண்டு வர முடியும் என்பதில் அவருக்கு உறுதியான நம்பிக்கை இருந்தது.

இதனை மனதிற் கொண்டவராய். மூன்று இளம் யுவதிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு வாழ்வின் பெறுமதிகளையும். அறத்துடன் கூடிய ஒழுக்கத்தையும் தனது திட்டத்திற்கே வழங்கி அவர்களை ஊக்கப்படுத்தினார். அவர்களை அர்ப்பணிப்புள்ள துறவிகளாக உருவாக்கிய அதேவேளை கல்வி புகட்டும் ஆசிரியர்களாகவும் உருமாற்றினார். 1844 ஐப்பசி 16ம் திகதி அருட்சகோதரிகளான **பேர்னாடா ஹெய்ம் காட்னர், பெலிசியானா கிராமர், கொர்னேலியா** ஆகியோர் தமது முதலாவது அர்ப்பண வாக்குறுதியை அளித்தனர். அவ்வேளையில் அருட்தந்தை தியோடோசியஸ் "உலகம் தான் உங்கள் துறவறமடம். மௌன அறைகளையும் மடங்களையும் நீங்கள் உங்கள் இதயங்களில் கண்டு பிடித்துக் கொள்ள வேண்டும்.

கிறிஸ்துவின் நற்செய்தியாக மாறுவது தான் உங்கள் மகிழ்ச்சி. நற்செய்தியின் படி வாழுங்கள். உங்களுடைய இலக்கு கிறிஸ்தவ யுவதிகளுக்கு கல்வியினைப் புகட்டுவதாகும். இவ்விலக்கு நீங்கள் செல்லும் எல்லா இடங்களிலும் நிறைவேற வேண்டும்" என்று கூறினார். எனவே அடுத்த நாள் மூவரும் மென்சிங்கனுக்குச் சென்று இளம் பெண்களுக்குத் தங்கள் கல்விப் பணியினை ஆரம்பித்தார்கள். அப்பொழுது அவர்கள் கல்வி கற்பிக்கும் திருச்சிலுவைக் கன்னியர் என்று அழைக்கப்பட்டனர்.

### 1906 இல் ஆசிரியப் பணியினைச் செய்த அருட் சகோதரிகள் இந்தியாவில் தாதியராக மாறினர்

ஆயர் ALOIS BENZINGER (தென்னிந்திய குயிலோன் மறை மாவட்ட ஆயர்) அவர்கள் கல்வி கற்பிக்கும் திருச்சிலுவைக் கன்னியர்களை தாதியர்கள் அல்ல என்று அறிந்தும் தாதிப்பணிக்காக இந்தியாவிற்கு அழைத்தார். "அர்ப்பணிப்புடன் கூடிய அறிவு டிப்ளோமாவிலும் சிறந்தது" என்று அவர் நம்பினார்.. அருட்தந்தை தியோடோசியஸ் எங்கும் எப்போதும் எத்தேவையிலும் முன்னிற்கும் கன்னியர்களாகத் தமது சபையை நிறுவினார். எமது அருட்சகோதரிகள் தாதிச் சேவையை குயிலோன். திருவனந்தபுரம் ஆகிய இரண்டு மாவட்ட அரசாங்க வைத்தியசாலைகளில் பொறுப்பெடுத்து அதனை நிரூபித்தார்கள்.




ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை - 1930

### 1930 இல் வணக்கத்துக்குரிய ஆயர் கியோமர் அவர்களால் தாதிய அருட்சகோதரிகள் ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலைக்கு அழைக்கப்பட்டனர்.

1924ம்ஆண்டுஅதிவணக்கத்துக்குரிய எம்யாழ்ஆயர் யோண் அல்பிறட் கியோமர் ஆண்டகை அவர்கள் தென் இந்தியாவுக்கு சென்ற போது அங்கு திருச்சிலுவை அருட்சகோதரிகளின் தன்னலமற்ற அர்ப்பணிப்புள்ள சுகநலப்பணியினைக் கண்டு அதன் மூலம் உந்தப்பட்டு இத்தகைய சேவை எம் நாட்டின் யாழ் பகுதிக்கும் தேவையென அன்றைய அரசிடம் வேண்டுகோள் விடுத்தபோது அது அரசின் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை. அவரது ஐந்து வருட அயராத உழைப்பின் பின் தனது செயலாளர் அருட்பணி சி.எ.பொயுறி ஒ.எம்.ஐ அவரின் மூலம் அருட்சகோதரிகளிடம் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு சிறிய அரச வைத்தியசாலையில் பணியாற்ற முடியுமா? என வினவும்படி கூறினார்.

தொடர்ந்து செயலாளர் அவர்கள் எழுதிய கடிதத்தில் 'இது ஊர்காவற்துறையில் புதிதாக கட்டப்பட்ட ஆதார வைத்தியசாலை. இங்கு பெண். ஆண் நோயாளர் விடுதிகளாக 46 கட்டில்கள் காணப்படுகின்றன. வைத்தியசாலையைப் பொறுப்பெடுக்கும் மூன்று அருட்சகோதரிகள் தங்குவதற்குரிய ஒரு சிறிய இல்லம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்கத்தினால் ஒரு வருட ஊதியமாக தலைமை அருட்சகோதரிக்கு 1500ரூபாவும் மற்றைய இரு அருட்சகோதரிகளுக்கு தலா 1200 ரூபாவும் வழங்கப்படும் எனவும் அவர்களின் சேவையின் அடிப்படையில் அதிகரிக்கப்படுமெனவும் குறிப்பிட்டிருந்தார்.

ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலையில் பயிற்சி பெற்ற அருட்சகோதரிகள் பணியாற்றலாம் என அரசினால் ஏற்றுக்கொள்ளப் பட்ட அனுமதி உறுதி 13.6.1930ல் (கடி இல. M230/29) அளிக்கப்பட்டது. புதிய வைத்தியசாலை ஆனி மாதம் 21ம் திகதி திறக்கப்பட இருப்பதால் அத்திகதிக்குப்பின் கடமையில் இணையலாம் என்றும் குறிப் பிடப்பட்டிருந்தது.

26-7-1930 பி.ப. 3.00 மணிக்கு அருட்சகோதரிகள் **பெனடிற்ரா, ஸ்ரொக்கர் ஒத்மா, குறுன்ரர் மரியா கரோலா** (12-12-1931 இறந்த அவர் ஊர்காவற்துறை சேமக்காலையில் அடக்கம் செய்யப்பட்டார்) ஆகியோர் தலைமைச் சகோதரி லியோனியுடன் ஊர்காவற்துறை படங்கு துறையை வந்தடைந்தபோது MOIC யாக இருந்த வைத்தியர் கதிரவேலு. புனித யோசப் அருட்சகோதரர்கள். திருக் குடும்ப அருட்சகோதரிகள். பாடசாலை மாணவர்கள். ஊர் மக்கள். அருட்தந்தை கில்லறி ஆகியோர் இணைந்து ஆலய மணியோசையுடன் வரவேற்று புனித யாகப்பர் ஆலயத்திற்கு அழைத்து சென்றனர்.

இதனைத்தொடந்து அருட்சகோதரிகள் தமது தாதியப் பணியினை ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலையில் ஆரம்பித்து தொடர்ந்து 32 வருடங்கள் (3-5 மிசனறி அருட்சகோதரிகள்) பணியாற்றினர்.

### 1934 இல் கொழும்புத்துறையில் முதியோர் இல்லம்

அருட்சகோதரிகள் ஊர்காவற்துறையை வந்தடைந்த குறுகிய காலத்தினுள் அரசிற்கும் ஆயர் கியோமர் அவர்களிற்கும் இடையே



யாழ் அரச பொது வைத்தியசாலை 1

ஏற்பட்ட பேச்சுவார்த்தையின் அடிப்படையில் திருச்சிலு
தரிகள் மூவர் கொழும்புத்துறையில் தயார் நிலையில் இ
இருந்த 40 முதியோரைப் பராமரிக்கவென வருகை தந்த
வொருவருக்கும் அரசினால் ஒரு வருடத்திற்கு 240 ரூப
ஆனால் திடீரென 80 பேராக அதிகரித்தனர். முதியோர்
வீட்டு பணிகள் எல்லாவற்றையும் உள்ளடக்கியதாய் இரு
தவிர வெளிநோயாளர்களையும் பராமரித்து வந்தனர்.
டத்திற்குரிய இவ்வில்லம் இன்று வரை திருச்சிலுவை அ
தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகின்றது.

### 1938 இல் யாழ் அரசாங்க பொது வைத்திய
### தாதிய அருட்சகோதரிகள்

அருட்சகோதரிகள் ஊர்காவற்துறை வைத்தியசா
யாற்ற ஆரம்பித்த அன்றிலிருந்து யாழ்ப்பாணத்து மக்கள்
தரிகளைத் தமது யாழ் அரசாங்க வைத்தியசாலை
வேண்டுமென வேண்டிக்கொண்டிருந்தார்கள். எனவே எ
பின் எதிர்பாராத விதத்தில் ஒரு சாத்திய நிலை உருவாகி
அனுபவங்களும் நிறைந்த ஏழு அருட்சகோதரிகள் 1938
வைத்தியசாலையின் வேலைத்திட்டத்தினை பொறுப் பே
கொள்ளப்பட்டார்கள்.



அருட்சகோ.மாகிறட் மேரி



பிரதம தா

இவ்வேண்டுகோளுக்கு இணங்க ஏழு
வைத்தியசாலையில் தமக்குப் பணிக்கப்பட்ட பொறுப்புக்
வேளையில் அவர்களை வைத்தியர் விக்கிரமசிங்க
டைய குழுவினரும் அன்புடன் வரவேற்றார்கள். அதே
தரிகளிடம் உள்ள சான்றிதழ்கள் சத்திரசிகிச்சைக் கூடத்
விடுதியையும் பொறுப்பேற்கத் தகைமையானதா என அ
ஒவ்வொரு அருட்சகோதரிக்கும் ஒன்று அல்
கள் பொறுப்பாகக் கொடுக்கப்பட்டன. அதேவேளை அ

# அகவைக்குள் காலடி எடுத்து வைக்கும்
# ச்சிலுவைக் கன்னியர்

விழாவினைக் கொண்டாடும்
நூற்றாண்டுக்கு முன்பிருந்த
ா நினைவு கூருகின்றவேளை
ட விதையின் மூலம் திருச்
பையானது சுவிட்ஸ்லாந்தி
னும் இடத்தில் 1844ம் வருடம்
ம்பிக்கப்பட்டது. இவ்விதை
ன்கு கண்டங்களில் உள்ள 18
து காணப்படுகின்றது.
காதரிகள் 1930ம் வருடம் ஆடி
யில் தம் பணியை ஆரம்பித்
இலங்கையின் ஒன்பது மறை
ஸ்தானில் ஓர் மறைமாவட்டத்
ப் பரப்பி சேவையை ஆற்றும்
கத் திகழ்கின்றது.

## மாகாணத் தலைவியின் ஆசிச்செய்தி



இவ்வருட திருச்சிலுவை மகிமை விழாவானது எமக்கு இரு முக்கிய நிகழ்வுகளுடன் ஆரம்பிக்கின்றது. முதலாவதாக, எமது சபை சுவிட்ஸ்லாந்திலுள்ள மென்சிங்கன் என்னும் கிராமத்தில் ஆரம்பித்து 175 வருடங்களை ஐப்பசி 17ம் நாள் நிறைவுசெய்கின்றது. எமது சபையானது கிராமப்புறங்களில் வாழும் பெண்களின் கல்வியை கருத்திற் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட போதும் வளர்ந்து சமூகத்தின் பல்வேறு தேவைக்கேற்ப பரந்து காணப்படுகின்ற போதும் எமது நிறுவுனரின் விருதுவாக்கான காலத்தின் தேவைக்கேற்ப பணி புரிவதே இறை சித்தம் என்பதற்கேற்ப ஆசிரியப்பணியில் அக்கறை செலுத்தினர். அடுத்து, 1930 இல் ஏற்பட்ட தேவைக்கேற்ப இலங்கையின் வட மாகாணத்திலுள்ள ஊர்காவற்துறை என்னும் தீவில் மூன்று அருட்சகோதரிகள் தமது சுகநலப் பணியை ஆரம்பித்தனர். நன்றிப்பெருக்குடன் இவற்றை நினைவு கூரும் இவ்வேளையில் இவை யாவும் இறைவனின் அருள்வரங்கள் என நான் நம்புகின்றேன். இவை யாவற்றுடனும் இணைந்து நாம் பாக்கியம் பெற்றவர்களாக கடவுளின் இரக்கம் நிறைந்த அன்பையும், குணப்படுத்தலையும், முழு மையையும் அளித்து எல்லோரும் ஒன்றாக இணைந்து புதுப்பிக்கும் நம்பிக்கையுடன் கூடிய உற்சாகம் நிறைந்த இறையன்பைத் தாங்கிச் செல்லும் தூதுவர்களாகப் பயணிப்போம்.

அருட்சகோதரி தி.றெஜினா
திருச்சிலுவைக் கன்னியர்

சியா அவர்களுக்கு வைத்தியசாலையின் முழு நிர்வாகப் பொறுப்பும் அளிக்கப்பட்டது. ஆனால் அருட்சகோதரிகளுக்கு மக்களுடன் உரையாடுவதற்கு அவர்களின் மொழி சற்றுப் பிரச்சினையாக இருந்தது. இதே வேளை அருட்சகோதரி அன்ரனி அவர்கள் சிறிதளவு தமிழ் மொழி அனுபவம் இருந்தமையால் இரவு சேவையினை ஆரம்பித்தார்.

தொடர்ச்சியாக யாழ் அரசாங்க வைத்தியசாலையில் பணியாற்றும் திருச்சிலுவை அருட்கோதரிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. 1951 தொடக்கம் 1962 வரை 19 அருட்சகோதரிகள் பணியாற்றினர்.

### 1954 இல் குருநகரில் சுகநல நிலையம்

நகரசபையின் வேண்டுகோளிற்கிணங்க குருநகர் மக்களின் சுகநலத் தேவைகளைக் கவனிக்கவென அருட்சகோதரி ஒருவர் நியமிக்கப்பட்டார். அவர் வீட்டு தரிசிப்புக்களை நடத்தி மக்களிற்கு சுகநலக் கல்வியினையும் அளித்து சிறிய நோய்களையும் குணப்படுத்தி சேவையாற்றினார். தற்போது இது கன்னியர் இல்லமாகப் பேணப்பட்டு வருகின்றது.



முதலாவது திருச்சிலுவை
தாதியர் கன்னியர் மடம் -1930

அவர்கள் தங்கள் சேவைகளை பின்வரும் இடங்களில் ஆற்றினர்.
- ➢ புனித மைக்கல் தனியார் மருத்துவமனை, கொழும்பு 05 1968-1996
- ➢ புனித அன்னம்மாள் தனியார் மருத்துவமனை, மாரவில 1978-1980
- ➢ மத்திய தனியார் மருத்துவமனை 1980-1982

அருட்சகோதரி விக்ரறின் ஜேம்ஸ்
திருச்சிலுவைக் கன்னியர்

### 1975 இல் சுவ சேவனா - முகத்துவாரம் கொழும்பு 15

சுகாதார பராமரிப்புப் பணியானது வறுமைக்குட்பட்ட மக்களுக்கு சரியான முறையில் போதுமானதாகச் சென்றடையவில்லை என்பதனை உணர்ந்த போது இதற்கான நுழைவுப்புள்ளியாக கொழும்பு சேரிப்புர பகுதி அமைந்தது. இங்கு உதவித் தாதியர் பயிற்சி, இலவச மருத்துவ உதவி, சத்துணவுத்திட்டம் போன்றன ஆரம்பிக்கப்பட்டு விரைவில் பல்வேறு கிராமங்களுக்கும் பரவியது.

### 2001 இல் முதியவர்களுக்கான பகல் நேர பராமரிப்பு மையம் கொழும்பு

புதிதாக அமைக்கப்பட்ட இல்லமானது ஆசீர்வதிக்கப்பட்டு தனிமையாக இருக்கும் முதியவர்களின் பகல்வேளைப் பயன்பாட்டிற்காக திறக்கப்பட்டது. அவர்கள் இங்கு கைவேலை செய்தும், உணவைத் தயாரித்துக் கொண்டும், வீட்டை நன்முறையில் பராமரித்தும் தம் பொழுதை செலவழித்தார்கள்.



த்தியசாலை 1963 இல் திருச்சிலுவைத் தாதியக் கன்னியரின் பிரியாவிடையின் போது...

டையில் திருச்சிலுவை அருட்சகோ
யார் நிலையில் இருந்த கட்டடத்தில்
ன வருகை தந்தனர். அவர்கள் ஒவ்
த்திற்கு 240 ரூபா வழங்கப்பட்டது.
தனர். முதியோர் பராமரிப்பு என்பது
ளடக்கியதாய் இருந்தது. இதனைத்
ரித்து வந்தனர். யாழ் மறைமாவட்
திருச்சிலுவை அருட்சகோதரிகளால்
.

### ாது வைத்தியசாலையில்

றை வைத்தியசாலையில் சேவை
ப்பாணத்து மக்கள் இவ் அருட்சகோ
வைத்தியசாலையிலும் பணியாற்ற
ார்கள். எனவே எட்டு வருடங் களின்
நிலை உருவாகியது. பயிற்சியும் நல்
சகோதரிகள் 1938 ஆவணி 10 இல்
தினை பொறுப் பேற்குமாறு கேட்டுக்



பிரதம தாதி பேன்ஹடா
அதிபர் திருமதி வல்லிபுரம்

ணங்க ஏழு அருட்சகோதரிகளும்
ப்பட்ட பொறுப்புக்களை ஏற்கச் சென்ற
விக்கிரமசிங்க அவர்களும். அவரு
ற்றார்கள். அதேவேளை அருட்சகோ
சிகிச்சைக் கூடத்தையும், மகப் பேற்று
மயானதா என ஆராய்ந்தார்கள்.
ும் ஒன்று அல்லது இரண்டு விடுதி
அதேவேளை அருட்சகோதரி அலோ

### 1960 இல் யாழ்ப்பாணத்தில் அரசாங்க வைத்தியசாலையில் தாதியர் பயிற்சிப் பாடசாலை

ஆரம்பத்தில் இருந்து அன்னை அலோசியா அவர்கள் இளம் பெண்களுக்கு அவசர நிலை தாதிய பயிற்சியினை அளித்து உருவாக்கியிருந்தார். இவ்வாறு உருவாக்கிய தாதியர்கள் 17 பேர் தமக்குரிய நியமனத்தினை 1953ம் ஆண்டு பெற்று இவ்வைத்தியசாலையிலேயே பணியாற்றுவதற்கும் தொடர்ந்து தமது பயிற்சியினைப் பெறுவதற்குமான நியமனத்தினை பெற்றனர். 1960ல் அருட்சகோதரி பேன்ஹடா தலைமைத் தாதியராக இருந்தபோது திருமதி வல்லிபுரம் போதனாசியராக பணியேற்றார். அப்போது மூன்று வருட தாதிய டிப்ளோமா பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது. தமது இளம் அருட்சகோதரிகளையும் தாதியர் பயிற்சிக்கு அனுப்பலாம் என்ற நம்பிக்கை அன்னைக்கு ஏற்பட்டது. ஆனால் அரசாங்க செயற்திட்டத்தின் படி ஒரு அருட்சகோதரி மட்டுமே முதல் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். ஆயினும் அவருக்குரிய வகுப்புக் கட்டணம் அருட்சகோதரிகளே செலுத்த வேண்டியதாக அமைந்தது. மற்றைய தாதியருக்கு அரசினால் கொடுப் பனவு வழங்கப்பட்டது.

துரதிஷ்டவசமாக 1961 இல் அரசினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி வைத்தியசாலையில் இருந்து அனைத்து அருட்சகோதரிகளும் வெளியேற்றப்பட்டார்கள். இதனால் அருட்சகோதரிகளின் சேவை குறைவடைந்து சென்று இறுதியாக 1963 ஐப்பசியில் இரு அருட்சகோதரிகளுடன் யாழ் அரச வைத்தியசாலையில் அருட்சகோதரிகளின் 25 வருட மகத்தான சேவை நிறைவுற்றது. 1930முதல் 1963 வரையிலான காலப்பகுதியில் சுவிட்ஸ்சலார்ந்து, ஜேர்மனி, இத்தாலி, அயர்லாந்து மற்றும் இந்தியா போன்ற நர்டுகளைச் சார்ந்த 57 மிஷனரி அருட்சகோதரிகள் நான்கு சுகநல நிறுவனங்களில் பணியாற்றினார்கள்.

### 1958 இல் புனித மைக்கல் தனியார் பராமரிப்பு நிலையம்

அருட்சகோதரிகள் மருத்துவமனையில் இருந்து அகற்றப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருந்த காலத்தில் இருந்தே தொலை நோக்குடைய ஆயர் எமிலியானுஸ்பிள்ளை மற்றும் பேராயர் தோமஸ் கூரே ஆகியோர் வாய்ப்புத் தேடிய பொழுதில் அருட்சகோதரிகள் புனித மைக்கல் தாதியர் இல்லத்தில் பணிபுரிவது சாத்தியமாகியது. ஆனால் வெளிநாட்டு மிஷனரிமார் அரச மருத்துவமனைகளை மட்டுமல்ல நாட்டையும் விட்டு வெளியேற வேண்டும் என்பதை உணரவில்லை. இந்நிலையில் 1963ம் ஆண்டில் சுகாதார பராமரிப்பிற்காக மூன்று தாதிய அருட்சகோதரிகள் மட்டுமே இருந்தனர்.

1962-1982 வரையான் காலப்பகுதியில் மூன்று மிஷனரி சகோதரிகளும் (60 வயதிற்கு மேற்பட்டோர்) நித்திய வாக்குப்பெற்ற மூன்று இலங்கை அருட்சகோதரிகளும், 18 தற்காலிக வாக்குத்தத்த அருட்சகோதரிகளும், நான்கு நவசன்னியாசிகளும், நான்கு முதல் நிலை பயிற்சி பெறுவோரும் காணப்பட்டனர். இந்நேரத்தில் ஆரம்ப காலம் போன்று உருவாக்கல் மற்றும் தொழில்முறைப் பயிற்சியும் முக்கிய உந்துதலாக மாறியது. இளம் அருட்சகோதரிகள் தாதியர்கள், மருந்தாளர்கள் போன்ற பயிற்சிக்கு அனுப்பப்பட்டனர். இலங்கையிலுள்ள தாதிய பயிற்சி நிலையங்கள் அருட்சகோதரிகளுக்கு மூடப்பட்டதால் சகோதரிகள் பயிற்சிக்காக இந்தியாவிற்கு அனுப்பப்பட்டனர். சகோதரிகளின் எண்ணிக்கை மெதுவாக அதிகரித்தமையினால்

### 1982 இல் திருச்சிலுவை சுகநல நிலையம் - கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்

1933 முதல் இந்தியாவில் மிஷனரி தாதிய அருட்சகோதரியான ஜேர்மனியைச் சேர்ந்த அருட்சகோதரி எட்முண்டாபவர்கொட்டியும் குயிலோன் திருச்சிலுவை மருத்துவமனையில் 28 ஆண்டுகள் பிரதம தாதியாக சேவையாற்றிய பின் 1982ம் வருடம் மாசித் திங்கள் 27ம் நாள் அருட்சகோதரி இசபெல்லுடன் எமக்குரித்தான வைத்தியசாலையொன்றை நிறுவும் சிறப்புப் பணி நோக்குடன் இலங்கைக்கு வருகை தந்தார். பங்குனி மாதம் 19ம் திகதியன்று கடற்ரை வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள மாகாண இல்லத்திற்கு அருகில் சுகநல நிலையத்திற்கான அடிக்கல்லை நாட்ட முடிந்தது. பின்னர் அருட்சகோதரி எட்முண்டா அவர்கள் வைகாசி மாதம் முதலாம் திகதி இலங்கை மாகாணத்தின் மூன்றாவது மாகாணத் தலைவியாக நிர்வாகத்தைப் பொறுப்பேற்றார்.

சுகநல நிலையக் கட்டடமானது அனுபவம் நிறைந்த அருட்சகோதரி இசபெல்லாவின் மேற்பார்வையின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு கார்த்திகை மாதம் 17ம் நாள் திறந்து வைக்கப்பட்டது. மேலும் மருத்துவமனையில் பணியாற்றுவதற்காக அனுபவம் வாய்ந்த தாதியர்களுடன் பிற தாதியர் இல்லங்களில் பணி புரியும் சில அருட்சகோதரிகளும் அழைக்கப்பட்டனர். அரச மருத்துவமனைகளில் இருந்து வெளியேற்றப்பட்ட இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் திருச்சிலுவை அருட்சகோதரிகளுக்கென ஒரு மருத்துவமனை வேண்டும் என்னும் நீண்ட கால விருப்பம் நிறைவேறியது.

### திருச்சிலுவை சுகநல நிலையம் தற்போது வழங்கும் சேவைகள்

- ❖ 24 மணி நேர வெளி நோயாளர் பிரிவு, மருந்தகம், மருத்துவ ஆய்வுகூடச் சேவைகள்
- ❖ பெண்களை மையமாகக் கொண்ட பராமரிப்பு - சிறப்பாக பிரசவம் மற்றும் பிரசவம் முன், பின் பராமரிப்பு
- ❖ சத்திர சிகிச்சைக்குப்பின் அதிதீவிர பராமரிப்பு

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

# அரங்கேற்றம் 02




'ஆட்கள் அன்பு செய்யப்படுவதற்கு பொருட்கள் பாவனைக்கு'

என்று அறிஞர் ஜோன் பவுல் கூறி யிருக்கின்றார்.

ஒரு முறை ஒரு சிறுவன் புதிதாக வீட்டிற்கு வந்த காரைக் கிறுக்கி சேதப் படுத்தி விட்டான். தந்தை நேரில் வந்து பார்த்ததும் கடுங் கோபம் கொண்டு கூப்பிட்டு அடித்து மகனின் விரலையும் துண்டாடிவிட்டார். மகன் கதறி அழ மகனைக் காரில் ஏற்றிக் கொண்டு வைத்திய சாலைக்கு சென்று கட்டுப்போட்டு வீடு வந்து சேர்ந்தார். மகன் 'அப்பா, என் விரல் இனி வளருமா அப்பா?' என்று வினவினான். அப்பொழுது தான் தந்தை மகன் எழுதிய கிறுக்கலை வாசித்தார். 'அப்பா, நான் உங்களை அன்பு செய்கிறேன்' என்ற அந்த வச னத்தை வாசித்ததும் குமுறிக் குமுறி அழுதார். பாச அலைகளை வலை போட்டுப் பிடிக்க முடியாது. நல்ல பெயரை வாங்க விரும்பும் பிள்ளைகளே, நீங்கள் எப்போதும் அன் போடு பழகுங்கள் அன்பைக் கொடுத்து அடிக்கடி இன்பம் காணுங்கள்.

தொடர்புச்சாதனங்கள், தொழில் நுட்பங்கள், உலகநாட்டங்கள் அதிகரித்து வரும் இன்றைய காலகட்டத்தில் நற்பண்புகள் அருகிப் போவதை அவதானிக்கலாம். எனவே இவற்றை முறியடிக்க நாணயமான உறவுப் பரிமாற்றம், நம்பிக்கை, நற்சிந்தனை, அனுசரித்துப் போதல் அறநெறியில் வாழுதல் போன்ற விழுமியங்களை வளர்வித்து வாழ முயற்சி எடுங்கள்.

(தொடர்ச்சி....)

**3. இனிய இல்லம்**

ஒரு ஆணும் ஒரு பெண்ணும் சுய பரஸ்பர விருப்பத்தின் அடிப்படையில் சட்ட ரீதியாக, சமயரீதியாக, சமூகரீதியாக மேற்கொள்ளும் உடன்படிக்கை உறவே திருமணமாகும். இவ்வாறு இணை-வதால் பிறக்கும் பிள்ளைகள், பெற்றோர் சேர்ந்து உருவாகுவதே குடும்பமாகும். 'நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்' என்றாற் போல பிள்ளைகளின் ஆரம்பப் பாடசாலையாகவும் இறுதிப் பாடசாலையாகவும் வீடே அமைகின்றது.

**இனிய இல்வாழ்வு**

பிள்ளைகளே, வீட்டின் சிறந்த பங்காளிகளாக உங்களையே ஆக்கிக் கொள்ளுங்கள். உங்களது தூய அன்பு, கள்ளங் கபடமில்லா வெள்ளையுள்ளம், பாரபட்சமற்ற பரிவு போன்றவை உங்களது பெற்றோர் அன்புறவில் வளரத் தூண்டுகின்றது.

*'அன்பும் அறனும் உடைத்தாயின் -*
*இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது'*

என்று திருவள்ளுவர் அன்பினையும் அறநெறியினையும் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படும் இல்லத்தை வர்ணிக்கின்றார். அன்பிற்கு ஈடாக எதுவுமே இருக்க முடியாது.

**முல்லாவின் கதை**

மன்னர் தனது மேல்மாடியின் மேற் பகுதியைப் படைத்தளபதிக்கும் கீழ்ப்பகுதியை முல்லாவிற்கும் அன்பளிப்பாகக் கொடுத்தார். மேல் மாடியில் இருக்கும் படைத்தள பதியின் மனைவி அடிக்கடி கல்லூரலில் மாவு இடிப்பார். அவ்வேளை வீடு அதிரும். முல்லா படைத்தளபதியை அணுகி மெதுவாக மாவு இடிக்குமாறு அவரது மனைவியிடம் கூறுமாறு பணித்தார். ஆனால் படைத்தளபதியோ கோபம் கொண்டு 'இது எனது வீடு. எனது வீட்டில் எனது மனைவி எப்படி வேண்டுமானாலும் மாவு இடிக்கலாம்." என்று ஏசி முல்லாவை எச்சரித்தார்.

மறுநாள் முல்லா தனது வீட்டின் பகுதியை அலவாங்கு கொண்டு உடைக்கலானார். 'கீழே என்ன செய்கிறாய்?' என்று அவசர அவசரமாக படைத்தளபதி கேள்வி கேட்டார். பதிலாக முல்லா 'இது என் வீடு. என் வீட்டில் நான் எதையும் செய்யலாம்' என்று பதிலளித்தார். உடனே படைத்தளபதி கீழிறங்கி, 'நாமிருவரும் அனுசரித்துப் போவோம். நண்பர்களாக இருப்போம்' என்று சமரசம் பேசினார். 'நான் எப்பொழுதுமே எல்லோருக்கும் நண்பன்தான்' என்று முல்லா சிரித்தார்.

எனவே பிள்ளைகளே, சண்டையின்றி அனுசரித்துப் போகும் பயிற்சி எடுங்கள். வரட்டுக் கௌரவத்தை விட்டு நல் வழி காட்டிகளாக மாறச் சிறு வயதிலிருந்தே ஆரம்பியுங்கள். பெற்றோர் பிள்ளைகளின் வார்த்தைகளை, உணர்வுகளை மதியுங்கள். விருந்தோம்பலை முதன்மைப் படுத்தி, இல்லத்தில் விளக்குகளாக எரிந்து வெளிச்சம் கொடுங்கள். எந்த வீட்டிற்குச் சென்றாலும் அது உங்கள் வீடு என்ற நினைப்பில் உரிமையோடு நடந்துகொள்ளுங்கள். பிறர் நலம், பிறரை மதித்தல், உற்சாகமாயிருத்தல், பரிவு போன்ற நற்பண்புகளைக் கற்பிக்கும் பாடசாலையாக இல்லம் விளங்குகிறது.

**அருட்பணி**
**வின்சன் பற்றிக் (அமதி)**

**உதவி வழங்கலும் உசார் நிலையில் வாழ்தலும்**

வீட்டில் அம்மாவிற்கு அல்லது சகோதரிகளுக்கு நல்ல முறையில் உதவி நல்க முன்வருகிறீர்கள் எனின் நீங்கள் பிற பெண்களுக்கு உதவி வழங்குவது இலகுவாயிருக்கும். வீட்டில் அப்பாவிற்கு அல்லது சகோதரன்களுக்கு நல்ல முறையில் உதவி நல்க முன்வருகிறீர்கள் எனின் நீங்கள் பிற ஆண்களுக்கு உதவி வழங்குவது இலகுவாயிருக்கும். பிள்ளைகளே, வீட்டில் குறிப்பிட்ட நேரத்தில் சேர்ந்து சாப்பிட, சேர்ந்து செயற்பட, சேர்ந்து செபிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். பெற்றோர் அல்லது சகோதரர்களிடம் உங்களது சகல விடயங்களையும் வெளிப்படையாகப் பேசுங்கள். உங்களது நேர அட்டவணை உங்களது வீட்டாருக்குத் தெளிவாகத் தெரியட்டும். சிறிய காரியங்களில் நம்பகத் தன்மையுடன் நடந்து கொள்வது உங்களை மேன்மை நிலைக்கே உயர்த்தும்.

பிள்ளைகளே, உங்களது பிரசன்னம் தேவையில்லை என்பதை உணரும் பொழுது அமைதியாக வெளியேறுங்கள். சத்தமாகக் கதவை மூடல், சத்தம் போட்டுக் கதைத்தல், பிறரை அழவைத்துச் சிரித்தல் போன்ற அனாவசியமான செயற்பாடுகளைத் தவிருங்கள். பெற்றோர் தமக்குள்ளே குழப்பமாக இருக்கும் போது மேலும் அசரப்பட்டு குழப்பத்தைக் கூட்டாதீர்கள்.

பிள்ளைகளே, பிறரது பெயர்களை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு பேசுங்கள். இடைக்கிடையே அவர்களுடைய பெயர்களை உச்சரியுங்கள். அமைதியான முறையில் உரையாடலை முன்னெடுங்கள். அவசரப்படுவதைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையுங்கள். பாரிய காரியங்களை கூறுபோட்டுச் சிறிது சிறிதாகச் செய்யுங்கள்.

**நியமங்கள்**

- பிள்ளைகளே, வீட்டில் ஒழுங்கைக் கடைப்பிடியுங்கள்.
- உங்களது உடைமைகளை, புத்த கங்களை வீடு முழுவதும் பரப்பி விடாதீர்கள்.
- வீட்டிலுள்ள மற்றவர்களது பொருட்களை அவர்களது அனுமதியின்றிப் பயன்படுத்தாதீர்கள். தவறு செய்யும் பொழுது நியாயப்படுத்தாது திருந்திக்கொள்ள முயற்சி எடுங்கள்.
- தவறு செய்யும் போதெல்லாம் நியாயப்படுத்தாது கரிசனையோடு திருத்திக் கொள்ள முயற்சி எடுங்கள்.
- தவறு செய்யும்போதெல்லாம் 'தயவு செய்து' என்று பேசப் பழகுங்கள். 'மன்னியுங்கள்' என்று உணர்வு ரீதியாக வெளிப்படையாகப் பேசுங்கள். மற்றவர்கள் உதவி நல்கும் போதெல்லாம் 'நன்றி' கூறுங்கள்.
- மதுபோதைப் பாவனையின்றி அமைதியாகப் பெற்றோர், சகோதரர்கள், நண்பர்கள் போன்றோரது பிறந்த நாளைக் கொண்டாடுங்கள்.
- உங்களது வீட்டை அழகாக வைத்திருங்கள். வீட்டு அந்தரங்கங்களை அம்பலப்படுத்தாதீர்கள்.
உங்களது குறைகள் பற்றிப் பிறரோடு பேசாதீர்கள்.
- உங்களது பணியாளர் சார்பாக இரக்கம் காட்டுங்கள்.
- அனைவரையும் அன்போடு வரவேற்று அவ்வப்போது நன்றி கூறுங்கள்.
- அவர்கள் சரியாகச் செயலாற்றுவதைப் பாராட்டுங்கள்.
- ஒவ்வொருவரையும் அன்போடும் பணிவோடும் எதிர் கொள்ளுங்கள்.

வீட்டில் இவ்வாறு கற்றுக்கொண்டவை உங்களது மகிழ்வான வாழ்வின் வித்துக்களாகும்.

(தொடரும்...)

## இந்த நிலை மாறும்



நம் எல்லோருடைய வாழ்விலும் இருண்ட நாட்கள் உண்டு. ஒவ்வோர் இருண்ட நாளும் கழியத்தான் போகிறது. இருளைப் புதுப்பித்துக் கொண்டே இருக்காதீர்கள். இறந்துபோன கடந்தகாலம் இறந்ததைப் புதைக்கட்டும். உலகில் எதுவும் எப்போதும் நீடிப்பதில்லை. தொல்லைகள்கூட நாமாகப் புதுப்பிக்காவிட்டால் சிறிது காலத்திற்குப் பின் மறைந்து விடுகின்றன.

எத்துன்பமானாலும் அவை விலகக்கூடியவையே என்னும் நம்பிக்கை உயர்வில் துணிந்து நாம் தாராளமாக எதையும் எதிர்கொள்ளலாம். தவிர்க்க முடியாத ஒன்று எதிர்ப்படும்போது அதை அப்படியே ஏற்கத் தயாராயிருங்கள். ஏனெனில் அது குறித்து நீங்கள் செய்வதற்கு ஒன்றுமில்லை. ஆகவே அதைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிராதீர்கள். மூழ்கும் கப்பலின் மேல் தளத்தைக் கழுவிச் சுத்தப்படுத்திக் கொண்டிருப்பது வீண் வேலை. அது மூழ்கத்தான் போகிறது என்பது திண்ணமானால், மூழ்கும் கப்பலை விட்டிறங்கி அடுத்த பயணக் கப்பலைத் தேடுவதுதான் சரியானது. எந்தச் சூழ்நிலையும் மாறும் என்றால் உங்கள் துன்பச் சூழலும் மாறும்தானே! இந்த நிலை மாறும்.

## நண்பனுக்கோர் மடல்



அன்பு நண்பா!

உன் நிலை கண்டேன். மருத்துவ நிலையம் சென்ற அனுபவத்தை கூறி இருந்தாய். முன்பு தான் போர்க்களம்பலஇழப்புக்கள்என்றுபார்த்தால்இப்போ அதை விஞ்சும் அளவிற்குகாயப்பட்டவர்கள்நிறைந்ததாகமருத்துவமனை உள்ளது. இதற்குக்காரணம் போதைகளால் பேதைகள் ஆக்கப்பட்ட நிலையில் மதிமயங்கி குடும்பங்களையும், நாட்டையும் அழிப்பதைக் காண்கிறோம்.

போதை வியாபாரிகளின் தந்திரம் நல்ல குடும்பங்களையும் ஊடுருவி, மாணவர்களையும் பாதிக்கின்றது. எமது இறை பற்றுறுதியின்மை, வழிபாடுகளை வாழ்வாக்கத் தவறியமை எமது இளையோரைப் பலிக்கடாவாக்கும் நிலைக்குத் தள்ளியுள்ளது. பெற்றோர்களின் கண்காணிப்பு இளையோர் மட்டில் இல்லாமல் போவதால் இளைய சமுதாயம் சீரழிகிறது.

தவறுகள் திருத்தப்படலாம். திருந்திவாழ்வதற்கு சந்தர்ப்பங்கள் உண்டு. இளைய சமூகத்தைப் பாதுகாப்பதற்கு, வழிகாட்ட முன்வரும் நல்லுள்ளம் கொண்ட இளையோருடன் பொதுச்சேவை செய்வோரும், மதத் தலங்களும் முன்வந்தால் முடியாதது ஒன்றுமில்லை. சிறுவர், இளையோர் பொழுதுபோக்கு மகிழ் களங்களை உருவாக்கி நற்பாதையில் இறை நம்பிக்கையில் அவர்கள் வளர அர்ப்பணங்கொண்ட இளையோர் வழிகாட்டிகளே இன்றைய தேவையாகும். வருவாயா கரம் கோர்த்து செயற்பட? தொடர்பு கொள்ள தளங்கள் பல உண்டு.

**ஜோசப் பாலா**
**உளசமூக சீராளன்**

## இளையோர் காவியம்

மனம் நினைவுகள் சம்பந்தமாக
மிகவும் ஒரு ஆபத்தானதேடல்

ஒருநாள் நோயாளர் காவு வண்டியில்
உருவப்படுத்துகிறேன் என்னை
அன்று நோயாளர் காவு வண்டியில்
யாழ் போதனா வைத்தியசாலைக்கு
எடுத்துச் செல்லப்படுகிறேன் நான்

உன் செயற்பாடுகள் இல்லாவிட்டாலும்
மனமும் நினைவுகளும் செயற்படுகிறது

நீ வாழ்க்கையை பூரணமாக
வெறுக்கும் போது ஏதோ ஒரு வழியில்
மரணம் வரும் என்கிறது உளவியல்

எப்பவும் தோல்விகள்
வாழ்க்கையில் ஏற்படுகிறதே தவிர
வாழ்க்கைக்கு ஏற்படுவது இல்லை

உன் துன்பங்கள்
தற்கொலைக்கான பாதையல்ல
வாழ்கிற வழியை கண்டுபிடிக்கிற பாதை

இந்த உலகத்தில் பெரிய மூடநம்பிக்கை
நீ தலைவிதியை நம்புவது
ஆசையில் மனமும் நினைவும் ஏமாந்து
விலக்கப்பட்ட கனியை உண்டு
தண்டனை பெற்றதே ஒளிய
ஆதாம் ஏவாள் தலையில் கூட
எழுதப்படவில்லை விதி

நீ அழுவதைத் தவிர
வேறு வழி இல்லையென்றால்
அதுதான் அழிவு

கண்ணீர் சிந்தப்படுவதால் மட்டுமல்ல
துடைக்கப்படுவதாலும் தான்
வாழ்க்கையில் மாற்றம்

நீ மழைக்குக் கூட பள்ளிக்கூடவாசல்
ஒதுங்கவில்லை என்று
கவலைப்படவில்லை நான்
நீ நம்பிக்கையோடு
கோவில் வாசல் ஒதுங்கு
நாளை உலகம் படிக்க வேண்டிய
புத்தகம் நீ

(தொடரும்.....)

உயிரோவியன்

# சுற்றுச் சூழலியம்

## ஓர் கிறிஸ்தவப் பார்வை



அருட்பணி. பீ.வினோராச்
கிளரீசியன் சபை

### அறிமுகம்

தாயகத்தின் கோடையையும், தமிழகத்தின் சுட்டெரிக்கும் கத்தரி வெய்யிலையும் கூட நான் கடந்து வந்திருக்கிறேன். கோடையும் சோழகமும் சோடியாக வருவதாலோ தெரியவில்லை, வெப்பம் ஒரு பொருட்டு என நான் கருதியதில்லை. ஆனால் ஐரோப்பாவில் இது எனக்கு முதல் கோடை. இங்கு குளிரை விட வெயிலெனும் போதுதான் வெளியிற்செல்ல தயங்கும் ஒரு புது உணர்வு.போர்க்களத்தில் பிறந்து அகதி முகாம்களில் வளர்ந்து ஆயுதங்களின் கோர ஒலிகளையும் அழு குரல்களையுமே ஆங்காங்கே தாலாட்டாய் கேட்டு வளர்ந்த ஒரு அனுபவமே எம் பலரின் உள்ளக் கிடக்கைகளில் புதைந்து கிடக்கின்றது.

நடந்து வந்த பாதைகளை பலரில் ஒருவனாக நானும் திரும்பி பார்க்கும் போது பல வகையான எண்ணங்கள் மலர்ந்து மறைகின்றன. இவை எனக்குள் உற்பத்தி செய்யும் உணர்வலைகள் ஏராளம். இவை இவ்வாறு இருக்க, புதியதோர் நிலப்பரப்பில் பிறிதோர் அரசியல் கலாசார பெருவெளியில் நான் காணும் நிதர்சனங்கள் பல வேளைகளில் ஆச்சரியமாகவும் விநோதமாகவும் இருப்பதுண்டு. அவை பல்வேறு வகையானதாக இருப்பினும் ஒரு விடயத்தை மட்டும் சற்று ஆழமாகவும் அழுத்தமாகவும் ஆய்வு செய்ய விரும்புகின்றேன். சில வருடங்களுக்கு முன்பு நாங்கள் பாடப் புத்தகத்தில் பரீட்சைக்காய் மட்டும் படித்த சுற்று சூழலியம் இங்கு அரசியல் அதிகாரத்தை தீர்மானிக்கும் தேர்தல்களில் பேசுபொருளாக மாறி இருப்பதும், குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் இக் கருத்தியலை முன்னிறுத்தும் அரசியல் கட்சிகள் அண்மைக் காலங்களில் பெறும் மக்கள் ஆதரவு போன்ற விடயங்கள் எனக்குள் பல சிந்தனைகளை பிரசவிக்கின்றன.

### மாறிவரும் மனித வாழ்வியல்

இப்பூமி பந்தின் வரலாற்றினை சற்றே இரைமீட்டி பார்த்தல், என்றுமே மனித குலம் தன் வாழ்வுக்கான வளர்ச்சிக்கான தேடலில் முழு முனைப்போடு ஈடுபட்டிருப்பது எமக்கு தெளிவாகின்றது. சாயல்கள் மாறினாலும் இத்தேடல் இன்றும் உயிரோட்டமுடன் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது. இந்த 21 ஆம் நூற்றாண்டில் இடம்பெறும் தேடலின் இலக்காய் இயற்கை அமைந்திருக்கின்றது என்றால் அது மிகையாகாது. பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாய் இயற்கையுடன் இரண்டறக் கலந்திருந்த மனித வாழ்வியலானது அண்மை காங்களில் வளர்ச்சி, நாகரிகம், முன்னேற்றம் என்ற தேவையான ஆனால் மனிதனை மட்டும் முன்னிறுத்திய ஏனைய படைப்புக்கள் மீதான ஓர் ஆதிக்க மனோ நிலை எம்மில் மேலோங்கியிருக்கிறது. இதன் காரணமாய் இயற்கையுடன் நாம் கொண்டிருந்த உறவு முறிவடைந்திருக்கின்றது என்றுதான் கூறவேண்டும் .இன்று பல நாடுகளில் மக்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ள ஒன்றுக்கொன்று முரணான காலநிலை மாற்றங்களும் பேரழிவுகளை ஏற்படுத்தும் இயற்கை அனர்த்தங்களும் இவ் உறவு முறிவின் வெளிப்பாடுகளே. வெயிலில் குளிரும், குளிரில் வெப்பமும் பணம் படைத்தவர்களுக்கு சாத்தியமாகின்றது. ஆனால் ஒரு வேளை உணவிற்கும், ஒரு குடம் குடிநீருக்கும், வெறுமனே அடிப்படை தேவைகளுக்கும் தினம் தினம் போராட வேண்டிய நிலையில் உள்ள உலகின் பெரும்பான்மை குடிமக்களாம் ஏழைகளின் நிலையென்ன? எத்தனை உயிர்களையும் பலிகொடுத்து தத்தம் அரசியல் அதிகார இருக்கைகளை தக்கவைக்க தயங்காத மக்கள் தலைவர்கள் மலிந்து விட்ட இத் தரணியில் இயற்கைத் தாயின் அழுகுரல் கேட்க யார் தயார்? இப்படி கேள்விகளை இன்று பலரும் எழுப்புகின்றார்கள் என்பதும் உண்மைதான்.

நிச்சயமாக இவர்களின் முயற்சிகள் பாராட்டப்படவேண்டியது தான். ஆனால் இவற்றை வெறுமனே அரசியல், பொருளாதார, அறிவுசார் ஒழுக்கநெறிகளுக்குள் மட்டுப்படுத்துவது எந்த அளவுக்கு ஆரோக்கியமானது என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். ஏனெனில் கடவுள் தொடங்கி மனிதன் மற்றும் ஏனைய உயிருள்ள உயிரற்ற அத்தனை விடயங்களையும் வெறுமனே இலாபம் ஈட்டக்கூடிய விற்பனை பொருளாய் குறுக்கி விட்ட வர்த்தக நுகர்வு கலாசாரத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்நிலையில் சுற்றுசூழல் பாதுகாப்புக்கூட சுய இலாபம் தேடும் கட்டமைக்கப்பட்ட விம்பமாய் மாறாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை .

### சூழலியமும் கிறிஸ்தவர்களும்

இவ்விடத்தில்தான் உலகிற்கு ஒளியாய் வாழ அழைப்புப்பெற்ற கிறிஸ்தவர்களாகிய எங்கள் கடமைகள் என்ன என்ற தேடல் தொடங்க வேண்டும். (மத் 5:14-16) கிறிஸ்தவர்களாகிய எமக்கு இது தட்டிக் கழிக்க முடியாத கடமை. நீண்ட நெடிய நம் பாரம்பரியத்தின் நிகழ்கால ஆன்மீகக் கடமை. ஏனெனில் எம்மை பொறுத்த மட்டில் சுற்றுசூழல் பாதுகாப்பு என்பது எம்மையும் நாம் தங்கி வாழும் சூழலையும் பற்றியது மட்டுமல்ல. மாறாக இவை அனைத்திற்கும் அடிநாதமாய் அமைந்த பேரன்பு கொண்டு எம்மை தாங்கும் இறைவனையும் பற்றியது. அவருக்கும், எமக்கும், நாம் காணும் படைப்பனைத்திற்கும் இடையிலான ஆழமான உறவைப் பற்றியது.

பரந்து விரிந்த இப்பிரபஞ்சத்தின் இற்றைவரைக்குமான வரலாற்றை ஒரு நூலாய் தொகுத்தால் அதன் இறுதி 2,3 பக்கங்களில் தான் மனித வரலாறு தொடங்குகின்றது என்கிறார்கள் அறிவியலாளர்கள். இதனையொத்த படைப்பின் ஒழுங்குமுறையைத்தான் விவிலியமும் எமக்கு விபரிக்கின்றது தொ.நூ1:1-31. இயற்கையின் அனைத்துக் கூறுகளையும் அதனதன் தனிப் பண்புகளோடு படைத்த பின் இறைவன் மனிதனை தன் சாயலாக உருவாக்கினார். (தொ.நூ1:26) ஆகவே நாம் படைப்பில் தனித்துவமானவர்கள் தான். சிறப்பு மிக்கவர்கள்தான். இறைவனின் இதயத்திற்கு நெருக்கமானவர்கள் தான். இருப்பினும் இப்பண்புகளை நாம் ஏனைய படைப்புகளின்மீது செலுத்தும் அளவு மீறிய ஆதிக்கத்தின் ஊடாகவும், அவற்றை சிதைப்பதனுடாகவும் வெளிப்படுத்துவது நாம் செய்து வருகின்ற மிகப்பெரும் வரலாற்று பிழை. ஏனெனில் இறைவன், படைப்பு, இதில் நாம் என்ற ஒழுங்கு முறை என்பது மாற்ற முடியாத ஒரு புனிதமான உறவுமுறை. கத்தோலிக்க திருஅவையின் மறைக்கல்வி இல:291. படைத்தவரைப் பிரிந்து படைப்பாகிய நாம் நெடுநாள் இயங்கமுடியாது. (யோவான் 15:4-6,க). (திம:இல338) எனவே தான் திருத்தந்தை பிரான்சிஸ் 2015 ஆம் ஆண்டில் அனைத்துலக திருஅவைக்கு எழுதிய **இறைவா உமக்குப் புகழ்** என்ற சுற்று மடலில் இயற்கையோடு ஒன்றிணைந்த ஒரு வாழ்க்கை முறையின் தேவையினை வலியுறுத்துகின்றார். (இல 228) சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது வாழ்வை நேசிக்கும் ஒவொரு வருவரின் கடமையாக இருந்தாலும், கிறிஸ்தவர்களாகிய எமக்கு இறைவனே ஒப்படைத்த பாரிய பொறுப்பு. இதனை தொடர்ந்து ஆற்றுவதனுடாக மட்டும்தான் நாம் படைப்புக்கள் அனைத்திலிருந்தும் தனித்துவமானவர்கள் என்ற அடையாளத்தை வெளிப்படுத்த முடியும். எமது விவிலியப் பண்பாட்டிலும் சரி, நீண்டகால வரலாறு கொண்ட கீழைத்தேய மற்றும் மேலைத்தேய துறவற வாழ்விலும் சரி, பல்வேறுபட்ட மனிதர்கள் இறைவனை காணவும் ஆழமான ஆன்மிக அனுபவம் பெறவும் இயற்கையைத்தான் நெருங்கிச் சென்றார்கள்.

### விவிலியத்தில் இயற்கை

மோயீசனுக்கும் இறைவனுக்குமான சந்திப்புக்கள் சீனாய் என்ற மலையில்தான் இடம்பெறுகின்றன. (விப:19) இஸ்ரேயலின் மக்களின் வாழ்க்கை பயணங்களில் இறைவன் தன்னை நெருப்பு, மேகம், காற்று என்ற இயற்கையின்வெவ்வேறு கூறுகள் ஊடாகவே வெளிப்படுத்தியிருக்கிறார். அவர் தன் உடனிருப்பை உறுதி செய்து தம்மை பசும்புல் வெளிகளுக்கும் அமைதியனான நீர்நிலைகளுக்கும் அழைத்துச் செல்வதாய் தாவீது படுகின்றார் (தி.பா:23). எலிசா போன்ற இறை வாக்கினர்கள் இயற்கையிலேயே இறைவனை கண்டு கொண்டனர், (1 அரச 1-9). இவ்வாறு பழைய ஏற்பாடு முழுவதுமே இயற்கையின் எழில்மிகு காட்சிகளால் நிறைந்து கிடக்கின்றது. இவை அனைத்தும் இயற்கை இறைமனித உறவின் ஊடகம் என்பதற்கான சான்றுகளே. இவைமட்டுமல்ல மனுவுரு எடுத்த இறைமகன் இயேசுவுக்கு கூட தம்மை புடமிடுவதற்கு ஒரு தனிமையான பாலைவன அனுபவம் தேவையாக இருந்தது (மத் 4:1-11) தந்தையுடன் உறவாட இயேசு இயற்கயின் இதமான தருணங்களை பலதடவைகள் தேடிச்சென்றார். (லூக் 5: 16, 6 :12) அவர் தம் இவுலக வாழ்வின் வலிசுமந்த அவ்விறுதி இரவுகூட ஒலிவ மரங்கள் சூழ்ந்த இயற்கையில்தான் கழிகின்றது (மத் 26 :36-46) அனைத்துக்கும் மேலாக இயேசுவின் போதனைகள், அவற்றை மக்களுக்கு விளக்க அவர் கையாண்ட உவமைகள், காட்சிகள் அனைத்தும் அவர் உள்ளத்தில் நிறைந்திருந்த இயற்கையின் அனுபவங்கள். இவரின் இறப்பின் போது நிலம் நடுங்கியது. பாறைகள் பிளந்தன. நண்பகல் 12.00 மணிக்கு நாடெங்கும் இருள் உண்டாயிற்று என்று விளக்குகின்றன நற்செய்தி நூல்கள் (மத் 27:51) இவையாவும் இயேசுவுக்கும் இயற்கைக்கும் இடையிலான நெருக்கமான உறவினையே விபரிக்கின்றன .

### இயற்கையும் புனிதர்களும்

இயற்கையோடு நாம் கொள்ளும் உறவிற்கு ஒரு ஆழமான மீட்கும் வல்லமை உண்டு. விவிலியத்தில் நாம் அடிக்கடி படிக்கின்ற இயற்கையின் அழகும் நன்மைத்தனமும் இறைவனின் மகிமையே என்கிறார் புனித இரண்டாம் அருள் சின்னப்பர். மண்ணையும், நீரையும், வயல் வெளிகளையும் காணும் போதெல்லாம் அவற்றில் நான் படைத்தவரின் நினைவுகளை கண்டு கொண்டேன் என எழுதினார் புனித அவிலா தெரசா. இறைவனை நாம் அனுபவிக்க இயற்கையை விட சிறந்த ஒரு ஊடகம் இருக்கவே முடியாது. இதைத்தான் புனித அகுஸ்தினார் சிலர் இறைவனை அறிய நூல்களை படிக்கின்றனர் .ஆனால் படைப்பெனும் மிகச் சிறந்த நூல் ஒன்று இருக்கிறது. அதை கூர்ந்து நோக்கி, படித்துக் குறிப்பெடுங்கள். நீங்கள் தேடும் இறைவன் இவற்றை மை கொண்டு எழுதவில்லை. மாறாக தன் கை கொண்டு படைத்தவற்றை உங்களுக்கு அருளினார். இதனை விட சிறந்த குரல் ஒன்று இருக்க முடியுமா என்றார்.ஆகவே இயற்கையை விட்டு விலகிய ஓர் இறைத் தேடல் சாத்தியமற்றது. எனவே படைத்தவரை ஓரம்கட்டிய எந்தவொரு சுற்றுச் சூழல் முயற்சியும் விழலுக்கிறைத்த நீர் போல் ஆகிவிடும். நம்பிக்கையின் மக்களாகிய நாம் இதனை புரிந்துகொள்ள வேண்டும்.

### சமகால நிதர்சனங்கள்

நல்ல சமாரியன் உவமையில் சித்தரிக்கப்படும் வழிப்போக்கனின் நிலைதான் இன்று பூமித்தாய்க்கு. கள்வர் கையில் அகப்பட்டு, ஆடைகள் உரியப்பட்டு,அடித்து குற்றுயிராய் விடப்பட்டிருக்கிறாள். (யோவா 10:25-37) புனித பிரான்சிஸ் அசிசியார் உரிமையோடு உறவு சொல்லி அழைத்த படைப்பு இன்று அவலக் குரல் எழுப்புகிறது.கடல் தரை மலை என நீண்டு செல்லும் இயற்கை வளங்கள் சுயநலத்தோடு சுரண்டப்படுகின்றன. நீர்,வளி,ஒளி போன்ற இயற்கையின் கொடைகள் நாளும் மாசுபடுத்தப்படுகின்றன. பறவைகள் விலங்குகள் மீனினங்கள் என விரிந்து செல்லும் உயிரினப் பன்மயம் பாதிப்புக்குள்ளாக்கப்படுகின்றது. இது போன்ற வன்முறைகளில் ஈடுபடும் போதும், இச் செயல்களை கண்டு கொள்ளாமல் இருக்கும்போதும் நாம் படைப்பிலிருந்தும் படைத்தவரிடமிருந்தும் பிரிந்து செல்கிறோம். இது மட்டுமல்ல எம்மைப் போன்ற எம் உறவுகளின் வாழ்வுரிமை மறுக்கப்படும்போதும் கேட்பார் யாருமின்றி மக்கள் கொத்துக் கொத்தாய் கொன்று குவிக்கப்படும் போதும், வாழ்விடம் தேடி வரும் அப்பாவி மக்களுக்கு போரையும் பேராயுத ஆலைகளையும் பொருளாதாரமாக கொண்ட நாடுகள் தம் வாயில்களை மூடும் போதும் மனுக்குலம் இறைவனுக்கு புறமுதுகு காட்டுகின்றது. விவசாய நிலங்கள் ஒழிக்கப்பட்டு, இயற்கை காடுகளும் நீர் நிலைகளும் நிர்மூலமாக்கப்பட்டு, விசாலமான கட்டடக் காடுகள் அமைப்பதுதான் வளர்ச்சி என்ற போலிகள் எமக்கு போதிக்கப்படுகின்றது. கடல் வளங்கள் இயந்திரக் கரம் கொண்டு சூறையாடப் படுகின்றன. மூன்றாம் உலக நாடுகள் பல இன்று செல்வந்த நாடுகளின் குப்பைத் தொட்டிகளாகவும், பன்னாட்டு நிறுவனங்களின் நவீன காலனித்துவ களங்களாகவும் மாறியிருக்கின்றன. இப்படியான அன்பு நீதி மற்றும் சமத்துவமற்ற போக்குத்தான் இன்றைய உலகில் ஏழைகளுக்கும் செல்வந்தர்களுக்குமான இடைவெளியை என்றுமில்லாதவாறு அதிகரித்திருக்கின்றது. உலகில் வாழும் 3.8பில்லியன் மக்களுக்கு உரித்தான வளங்கள் வெறுமனே 26 தனிச் செல்வந்தர்களின் கைவசம் உள்ளது. இந்த 3.8 பில்லியன் என்பது உலக ஏழைகளின் மொத்த தொகையில் அரைவாசி. (ox farm அறிக்கை 20 .01.2019) இத் தரவுகளை பார்க்கும்போது "அவர்கள் செல்ல வேண்டாம். நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்" என்று சீடரைப் பார்த்து கூறிய இயேசுவின் வார்த்தைகள் ஞாபகம் வருகின்றது (மத்14:16.) "எங்களிடம் இங்கே ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களையும் தவிர வேறொன்றும் இல்லை" என பொறுப்பற்ற முறையில் நாம் கை விரிக்க முடியாது. ஏனெனில், இவை அனைத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்தவ கடமைகளுடன் சமரசம் செய்வது தவறு என்கிறது திரு அவை. (திருத்தந்தை 16ம் பெனடிக்ற்,Caritas in veritate இல 48 51).

### முடிவுரை

நியாயமான அரசியல் உரிமைகளுக்காகவும்,நீதிக்காகவும், பல இழப்புக்களையும் தாண்டி இன்றும் நாம் போராடிக் கொண்டுதான் இருக்கிறோம் என்பது உண்மைதான்.இவற்றோடு இணைத்து, இப் பிரபஞ்சத்தில் நாம் வாழ இன்றுவரை சாத்தியமாய் இருக்கின்ற ஒரேயொரு பொது இல்லமாகிய இப் பூமித்தாயின் பாதுகாப்பிற்காகவும் நாம் உழைக்க வேண்டியிருக்கிறது.நாம் கண்ட வலிகளையும் இழப்புக்களையும் வருகின்ற தலைமுறைக்கு அப்படியே கடத்தி விடக் கூடாது.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

# காவலன் கலசம்




# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி. செ. அன்புராசா அமதி**

*(கண்ணன், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: இலங்கையில் தேர்தல் களம் சூடுபிடித்திருக்கின்றது. தேர்தலில் என்ன தான் நடக்கப் போகின்றது?**

ப: கண்ணன், இரண்டு விடயங்கள் நிச்சயமாக நடந்தேறும்! ஒன்று, பல உண்மைகள் வெளிவரும்! இரண்டு, அறம்புறம்பான பொய்கள் சொல்லப்படும்! எவ்வாறெனில், தேர்தல் பிரசாரக் காலத்தில் ஒரு வேட்பாளர்(அல்லது ஒருகட்சி)மற்றையவேட்பாளருக்கு (அல்லது கட்சிக்கு) எதிரியாக மாறி அவர் செய்த செய்யும் அநியாயங்களை, அட்டூளியங்களை, ஊழல்களை வெளியே, வெளிச்சத்திற்குக் கொண்டு வருவார் (அல்லது வரும்) இதனால், உண்மைகள் வெளி-வரும் அதேவேளை, ஆண்டாண்டு காலமாக உள்ள பிரச்சினைகளுக்கு இதுவரை காலமும் தீர்வுகாண முயலாதவர்கள், மனமில்லாதவர்கள், விரும்பாதவர்கள், துணியாதவர்கள் தேர்தல் பிரசாரக் காலத்தில் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் வெற்று வாக்குறுதிகளால் தீர்த்துவைப்பார்கள். இதற்காக, அறம்புறம்பான பொய்கள் சொல்லப்படும்! இதுதான், இலங்கையில் இதுவரை இடம்பெற்ற, இனியும் இடம்பெறப்போகும் 'தேர்தல் காலத்து அரசியல்' எனக் கூறலாம்!

*(உதயா, வவுனியா)*

**கே: விடுதலைப் புலிகளின் தலைவர் உயர்திரு வே. பிரபாகரன் அவர்களைப் பற்றி இந்நாட்களில் அரசியல் தலைவர்கள் பெரும் புகழாரம் சூட்டுகின்றார்களே! என்ன காரணமோ?**

ப: புரியவில்லையா உதயா!... தேர்தல்களின் முடிவுகளை தீர்மானிக்கும் சக்தியாக வடக்கிலும் தெற்கிலும் கிழக்கிலும் மேற்கிலும் அவன்தான் அன்றும் இருந்தான்! இன்றும் இருக்கிறான்! அதனால்தான்!

*(சாளினி, யாழ்ப்பாணம்)*

**கே: இலங்கையின் புதிய இராணுவத் தளபதியின் நியமனம் நாடளாவிய ரீதியிலும், உலகளாவிய ரீதியிலும் பல சர்ச்சைகளை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்நியமனத்தின் ஊடாக பேய் பிசாசைக் கொண்டு வந்த கதையாகவே தென்படுகின்றது! உங்களின் கருத்தை அறிய விரும்புகின்றேன்?**

ப: சாளினி, இரண்டாம் கருத்துக்கு இங்கு இடமில்லாமல் நீங்களே கூறிவிட்டீர்கள்!

*(சுதர்சன், யாழ்ப்பாணம்)*

**கே: ஆகக்குறைந்தது அருட்தந்தை பிரான்சிஸ் யோசப், அருட்தந்தை ஜிம் பிறவுண் ஆகியோருக்கு என்ன நடந்தது என்பதை ஆராய்ந்து ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை வரை கொண்டு சென்றிருந்தாலே இலங்கை இராணுவத்தால் காணாமலாக்கப்பட்ட பலநூறு பேர்களின் நிலையினை உலகறியச் செய்வதற்கும் சர்வதேச தலையீட்டை கொண்டுவரவும் வழிபிறந்திருக்கும்! ஏன் இதனை திருஅவை செய்யத் தவறியது?**

ப: இப்போதுகூடக் காலம் காலாவதியாகவில்லை! செய்யலாம். செய்யவேண்டும்.

*(விதுசா, முல்லைத்தீவு)*

**கே: இத்தேர்தலில் ஆட்சி மாறும் என நம்புகின்றீர்களா?**

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

ப: ஒருபோதும் இல்லை. ஆள்தான் மாறும்!

*(மாலா, மன்னார்)*

**கே: இப்போது நடைபெறும் அபிவிருத்தி வேலைகளால் மக்களின் வாழ்க்கைத் தரம் அதிகரித்திருக்கின்றது - கூடியிருக்கின்றது எனக் கருதமுடியுமா?**

ப: மாலா, வசதி வாய்ப்புக்கள் அதிகரித்திருப்பது உண்மைதான். ஆனால் மக்களின் வாழ்க்கைத் தரம் அதிகரித்திருக்கிறது என்று எப்படிச் சொல்லமுடியும்? மிகவும் பிரச்சினையான காலங்களுக்குள் வாழ்ந்ததில் இருந்த மகிழ்ச்சி இப்போது இத்தனை வசதி வாய்ப்புக்கள் வந்தும் வருகுதில்லையே! பின் எப்படி, நடைபெறும் அபிவிருத்தி வேலைகளால் மக்களின் வாழ்க்கைத் தரம் அதிகரித்திருக்கிறது அல்லது கூடியிருக்கிறது என்று கூறமுடியும்! தரம், தனியே புறத்தைப் பூசுவதால் மட்டும் ஏற்பட்டு விடாது!

*(ஆனந்தி, பருத்தித்துறை)*

**கே: திருக்கேதீஸ்வர வளைவுப் பிரச்சினை கவலையளிக்கின்றது! எம்மவர் மட்டில் தவறு இல்லாது இருப்பினும் விட்டுக்கொடுப்புடன் செயற்பட்டு இப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதுதான் சிறந்தவழி. இவ்வாறு செயற்படுவோமாயின் அது மற்றய சமய சமூகத்தினரிடையே எம்மைப் பற்றிய மேலான எண்ணத்தை ஏற்படுத்தும், எடுத்தியம்பும், அதுமட்டுமல்லாது, திருக்கேதீஸ்வர ஆலய சமூகத்தனர் என்றோ ஒரு நாள் தம் தவறினை உணர்வதற்கு வாய்ப்பாக அமையும் என என் மனம் கருதுகின்றது. தங்கள் அபிப்பிராயம் என்ன?**

ப: ஆனந்தி, நீங்கள் முன்மொழிந்த கருத்தினை வழிமொழிவதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை!

*(பிரியா, மன்னார்)*

**கே: மாமியாருக்கும் மருமகளாகிய எனக்கும் அடிக்கடி சண்டை வருகின்றது. நன்மையைச் செய்தாலும் அது கடைசியில் பிரச்சினையில்தான் வந்து முடிகின்றது! என்ன செய்யலாம்?**

ப: பிரியா, உங்களுடைய பிரச்சினையின் நிலைமையை இந்தக் கேள்வியின் ஊடாக முழுமையாக விளங்கிக்கொள்ளவும் முடியாது, முழுமையான பதிலைத் தரவும் இயலாது!... எனினும், ஆகக் கிட்டவும் போகாமல், ஆக எட்டவும் நிற்காமல் நடந்து கொள்வீரகளேயானால் நட்டமில்லாமல் வாழ்க்கையை நகர்த்தலாம்போல் தோன்றுகிறது!

*(கருணா, மன்னார்)*

**கே: தமிழ் - முஸ்லிம் தலைமைகள் ஒன்றுசேர வேண்டும், தனித்து நின்று எதனையும்சாதிக்கமுடியாது'எனநாடாளுமன்ற உறுப்பினர் ஹரிஸ் தெரிவித்திருக்கின்றார். இப்போது தான் இவ்விடயம் இவர்களுக்குப் புரிகின்றதா?**

ப: கருணா, ஏற்கனவே புரிந்திருந்தது. ஆனால், இப்போதுதான் புத்தியில் பொறித்திருக்கிறது!

*(திலகா, யாழ்ப்பாணம்)*

**கே: தற்கொலை செய்வோரின் எண்ணிக்கை இலங்கையில் அதிகரித்திருக்கின்றது எனத் தகவல்! இதனை இல்லாதொழிக்க என்ன செய்யலாம்?**

ப : முதலில் திலகா, எந்தத் சூழ்நிலையிலும் நாம் இதனைச் செய்யாதிருப்பது என முடிவெடுப்பது! அடுத்து, மற்றவர் செய்வதற்குக் காரணமாய் இருக்காதிருப்பது! மேலும், இவ்வாறான எண்ணம் உள்ளவர்களை இனம்காணும்போது அவர்களை வழிப்படுத்தக்கூடிய வழிப்படுத்துனர்களிடம் அழைத்துச் செல்வதன் மூலம் அவர்கள் இத்தகைய எண்ணத்திலிருந்து விடுபட்டு வாழக்கூடிய வழிவகைகள் பிறக்கும்!

*(மனோகரன், மன்னார்)*

**கேள்வி: அண்மையில் உங்கள் உள்ளத்தை உலுப்பிய செய்தி ஒன்றைக் கூறமுடியுமா?**

ப: பல உண்டு! ஒன்றைக் கேட்டதால் ஒன்றையே தருகிறேன்: நாடு கேட்டுப் போராடிய போராளி வீடுகேட்டு வீதியில் நிற்கிறார் என்ற செய்தியைப் படித்தபோது!

(கவிதா, யாழ்ப்பாணம்)

**கே: காதலிப்பவர்கள் முதலில் கவனிக்க வேண்டியது என்ன? ஒரு சொல்லில் பதில் தருக.**

ப : கண்ணியம்!

**உங்கள் கேள்விகளை, பெயர், முகவரியுடன் குறிப்பிட்டு, 'என் கேள்விக்கென்ன பதில்', 'அமைதித்தென்றல்', உண்ணாப்புலவு, முல்லைத்தீவு என்ற முகவரிக்கோ, anpuomi1970@gmail.com என்ற மின்னஞ்சலுக்கோ, அல்லது 0778 648 548 என்ற எண்ணுக்கு sms, viber அல்லது whatsappக்கோ அனுப்பி வைக்கலாம்.**




**அருட்பணி S.V.B. மங்களராஜா**

(சென்ற இதழ் தொடர்ச்சி...)

**சுதேச குருக்கள் உருவாக்கம்**

16ம் நூற்றாண்டில் கத்தோலிக்க சமயம் இலங்கையில் அறிமுகமாகியிருந்தாலும் 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை சுதேச குருக்கள், துறவிகளுக்கான அழைத்தல்கள் அவர்களின் உருவாக்கம் ஆகியன சாத்தியப்படாத விடயங்களாகவேயிருந்தன. 1658ம் ஆண்டு யாழ்ப்பாண இராச்சியம் கல்வினிசத்தைப் பின்பற்றிவந்த ஒல்லாந்தர் கைக்கு மாறமுன் இங்கு மட்டும் ஏறக்குறைய 50 பங்குகளும்,ஒரு இலட்சத்திற்கதிகமான கத்தோலிக்கரும், பல்வேறு துறவற சபைகளைச் சேர்ந்த 50 குருக்களும் பணியாற்றி வந்தனர். இவர்கள் எல்லோரும் வெளிநாட்டவரே. இலங்கை முழுவதும் ஏறைக்குறைய 100 குருக்கள் பணியாற்றிக் கொண்டிருந்தனர். இவர்களுள் எவரும் சுதேச குருக்களல்ல. யாழ்ப்பாண இராட்சியப் பகுதியில் குறிப்பாக கடைசி மூன்று தசாப்தங்களே (1622-1658) யாழ்ப்பாணம் போர்த்துக்கேயரது முழுக்கட்டுப்பாட்டில் இருந்தமையால் இந்தக்குறுகியகாலத்தில் சுதேச குருக்களை உருவாக்கவோ, அவர்களுக்கான பயிற்சியை ஏற்பாடு செய்யவோ அவகாசம் இருந்திருக்க முடியாது.

கத்தோலிக்க சமயம் தடைசெய்யப்பட்டிருந்த ஒல்லாந்தர் காலத்தில் (1658-1796) கோவாவில் இருந்து வந்த புனித ஜோசப் வாஸ் அடிகளும் தொடர்ந்து வந்த ஒரட்டோரியன் சபைக்குருக்களுமே இங்கு பணியாற்றிக்கத்தோலிக்க திருமறையை அழிவிலிருந்து காத்தனர். இக்காலத்திலும் இலங்கையிலிருந்து தகுதியுள்ள சிலரையாவது கோவாவுக்கும் பயிற்சிக்கு அனுப்பிப்பெற எம் முயற்சியும்மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

கோவா ஒரட்டோரியன் சபைக் குருக்கள் பொதுவாகப் பிராமண குலத்தைச் சார்ந்தவர்களாகவே இருந்தமை குறிப்பிடத்தக்கது. 1796ல் ஆங்கிலேயருடைய வருகைக்குப் பின்னர் ஏறக்குறைய 50 வருடங்களாகத் தொடர்ந்து இலங்கையில் பணியாற்றி வந்த கத்தோலிக்க மறை பணியாளர் அநேகமாக கோவா ஒரட்டோரியன் சபைக்குருக்களாகவேயிருந்தனர். துரதிஷ்டவசமாக இக்காலத்திலும் இவர்கள் இங்கு ஒரு குருமடத்தை ஏற்படுத்துவது பற்றியோ தகுதிவாய்ந்த இளைஞர்களைத் தேர்ந்து இந்தியாவுக்கு குருத்துவ, துறவற நிலைப்பயிற்சிக்கு அனுப்புவது பற்றியோ நடவடிக்கை எடுக்கவில்லை.

இலங்கை ஒரு திருத்தூது மாவட்டமாக ஏற்படுத்தப்பட்டுப் பின்னர் அது தெற்கு (கொழும்பு), வடக்கு (யாழ்ப்பாணம்) என இரு திருத்தூது மாவட்டங்களாக ஏற்படுத்தப்பட்டு வடக்கின் முதல் ஆயராக 1846ம் ஆண்டு ஓறாசியோ பெற்றக்கீனி ஆண்டகையவர்கள் ஏற்படுத்தப்பட்ட பின்னர் சுதேச குருக்களை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கு வேண்டிய ஆளணி மற்றும் வளங்கள் இருந்திருந்தால் அப்போதே ஆயர் பெற்றகீனி ஒரு குருமடத்தை ஏற்படுத்தியிருந்திருப்பார். எனினும் குருமடம் ஒன்று ஏற்படுத்தும் வரை ஆயர் பெற்றக்கீனியவர்கள் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. பிரான்சிஸ் சேவியர் (சவிரிமுத்து), பிரன்சிஸ் வடுலீசன் ஆகியோரைக் குருக்களாக்கும் முயற்சியில் தமது பாரிய வடக்குத் திருத்தூது மாவட்டத்தரிசிப்புகளில் தமது மொழிபெயர்பாளர்களாகவும், மறையாசிரியர்களாகவும் கூட்டிச்செல்வது வழக்கம். 1854ம் ஆண்டு ஆயர் பெற்றகீனி இத்தாலி சென்றபோது இவ்விரு இளைஞர்களையும் அழைத்து சென்றார். மிலான் நகரிலுள்ள வெளிநாடுகளுக்கு மறைப்பணியாளராகச் செல்வோரைப் பயிற்றுவிக்கும் குருமடத்தில் பயிற்சிபெற பிரான்சிஸ் சேவியர் அடிகள் சேர்த்துவிடப்பட்டார். பிரான்சிஸ் சேல்ஸ் வடுலீசன் அவர்கள் ஆயர் பெற்றகீனியுடன் ரோமைக்கு வந்தார். முன்னதாக இவ்விருவரும் ஆயர் பெற்றகீனியால் குருத்துவப்பயிற்சிக்குத் தேவையான மெய்யியல், இறையியல் துறைகளில் ஓரளவு பயிற்றுவிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. அருட்சகோ. பிரான்சிஸ் சேவியருக்கு மிலானில் கிடைத்த குறுகிய கால் கோட்பாடு இறையியல் மற்றும் அறநெறி இறையியல் பயிற்சி அருட்சகோதரர் வடுலீசன் அவர்களுக்கு கிடைக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஆயர் பெற்றகீனி கேட்டுக்கொண்டதன்படி கருதினால் பிரான்சோனி அவர்களால் குருத்துவ நிலைக்கான ஆயத்த நிலைப்பட்டங்கள் அருட்சகோதரர் பிரான்சிஸ் சேவியருக்கு வழங்கப்பட்டன.

ஆயர் பெற்றகீனி இறைவனடி சேர்வதற்குச் சில மாதங்களின் பின் அவரே தேர்ந்தெடுத்து உருவாக்கி பெருமளவு மெய்யியல், இறையியலும் பயிற்றுவித்த அருட்சகோதரர்கள் பிரான்சிஸ் சேவியர், பிரான்சிஸ் சேல்ஸ் வடுலீசன் ஆகிய இருவரையும் 1857ம் ஆண்டு தவக்காலத்தில் திருத்தொண்டர்களாகவும் ஒருவாரத்தின் பின் ஏப்ரல் 23ம் திகதி குருக்களாகவும் திருநிலைப்படுத்தினார். இவர்கள் தான் யாழ் திருத்தூது மாவட்டத்தின் முதல் மறைமாவட்டக்குருக்கள் .ஆயர் செமேரியா வடக்குக் திருத்தூது மாவட்ட ஆயராகப் பொறுப்பேற்றபோது இங்கு பணியாற்றிக் கொண்டிருந்த சுதேச மறை மாவட்ட குருக்கள் இவர்களே. இங்கு குருமடம் ஒன்று இல்லாததால் சுதேச குருக்களை, அவர்கள் மறைமாவட்டக் குருக்களாகவோ அல்லது துறவற சபைக் குருக்களாகவோ உருவாக்குவது என்பது கேள்விக்குறியே என்று ஆயர் செமேரியா 1860ம் ஆண்டு குறிப்பிட்டுள்ளார். (தொடரும்...)

## விண்ணக வாழ்வில் ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில் 1944 02 25

விண்ணில் 2018 09 06

அமரர்

**அருட்சகோதரி மேரீயுட் மடுத்தீன் (மலர்)**

(தி.கு.க.சபை)

இளைப்பாறிய அதிபர், வ/இறம்பைக்குளம் மகளிர் தேசிய பாடசாலை

("உயிர்ப்பும் உயிரும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பிலும் வாழ்வார்")

(யோவான் 11 : 25)

AD 53

அன்பினால் எம்மை அரவணைத்து பண்பினால் வழிநடத்தி
துயரினில் ஆறுதலாய் நின்ற தூரம் சென்றதேனோ?.......
உறவுகள் ஆயிரம் இருந்தாலும் இறையுறவே மேலெனக் காட்டி
ஆளுமையின் சிகரமாய் நின்று ஆன்ம வழிகாட்டிய அமலியே
உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனிடம் பிராத்திக்கின்றோம்.

ஈரவிழிகளுடன்!

இவரின்பிரிவால்
துயருறும் குடும்பத்தினர்.

## பிறப்பின் 61ம் இறப்பின் 04ம் நினைவுகள்



பிறப்பு 1958 08 23

இறப்பு 2015 08 31

**அமரர் கொன்சலா புவனராஜேஸ் அமலரட்ணம் (ராஜேஸ்)**

பிறப்பையும் இறப்பையும் ஒரே திங்களில் கண்ட என்னினிய இதய தெய்வமே
என் குடும்பம் எனும் பழமுதிர்ச் சோலையில் அணையாது ஒளி வீசிய குல விளக்கே
தினமும் நினைத்து விழி நீர் சொரிகின்றோம்.
வஞ்சகரின் கூட்டம் வலை விரித்தாலும்
கூடவே வந்து குழி பறித்தாலும் உன் ஆன்மாவின் உடனிருப்பும்
வல்லமையுள்ள நின் பரிந்துரையும் எம்மையெல்லாம் பாதுகாத்து வழிநடத்தும்
நின் ஆன்மா அமைதி பெற தினமும் நாம் வேண்டுகின்றோம்.

திருப்பலிகள் - புனித மரியன்னை பேராலயம் - 5.30 மணி, அருள் ஆச்சிரம் - 6.00 மணி
யாழ் மறைக்கோட்ட ஏனைய ஆலயங்களிலும், மன்னார் மடுத்திருப்பதியிலும்திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

200 குருசோ வீதி, யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்

## 1ம் வருட நினைவஞ்சலி



மலர்வு 24 . 09 . 1943

உதிர்வு 17 . 09 . 2018

அமரர்

**சிங்கராஜர் யேசுதாசன்**

(ஜெயராசா)

(முன்னாள் மரியன்னை பேராலய உதவி திருப்பண்டக் காப்பாளர்)

AD 55

"உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்யப் போகிறேன்
உங்களை என்னிடம் அழைத்துக்கொள்வேன்"

102, மவுண் கார்மல் வீதி,
யாழ்ப்பாணம்

தகவல்
குடும்பத்தினர்

# இலங்கையில் அங்கிலிக்கன் பேராயர் ஒற்றுமைக்கு அழைப்பு

இலங்கையில் மூன்று நாட்கள் ஒருமைப்பாட்டுப் பயணத்தை மேற்கொண்டுள்ள இங்கிலாந்தின் கான்டர்பரி அங்கிலிக்கன் பேராயர் ஜஸ்டின் வெல்பி அவர்கள் உயிர்ப்புப் பெருவிழா வன்று பயங்கரவாத தாக்குதல்களுக்குப் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.

கடந்த ஏப்ரல் 21ம் திகதி பயங்கரவாத தாக்குதலுக்கு உள்ளான கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்திற்கு ஓகஸ்ட் 29 ஆம் திகதி சென்ற பேராயர் வெல்பி அவர்கள் அத்தாக்குதலில் பலியானவர்களின் குடும்பங்களையும் சந்தித்தார்.

ஆலயத்தில் பயங்கரவாத குண்டு வெடிப்பு தாக்குதலில் சேதமடையாமல், அதேநேரம் பலியானவர்களின் குருதியு-ால் தோய்ந்திருந்த உயிர்த்த இயேசு வின் திருஉருவத்தைப் பார்த்த பேராயர் இது நம்பிக்கையாளர்களின் ஆழ்ந்த இறை நம்பிக்கையையும், துணிச்சலையும், அன்பையும் நினைத்துப் பார்க்கச் செய்கின்றது என்று கூறினார்.

## சுற்றுச் சூழலியம்...

(9ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் வாழமுடியாத ஒரு சுற்றுச் சூழலை அவர்களுக்கு நாம் விட்டுச்செல்ல முடி யாது. துன்பத்தின் தளைகள் தகர்ந்து, இறப்பின் கல்லறைகள் திறந்து, உயிர்ப்பு என்ற விடுதலை உண்மையாய் பிறக்கும் என்பதனை உறுதி செய்த கிறிஸ்துவின் சீடர்கள் நாம். இதே நம்பிக்கையின் ஆற்றல் கொண்டு உறங்கும் எங்கள் உள்ளங்களை உயிர்பெறச் செய்ய வேண்டும்.

அனைத்துலக சவாலாக உருவெடுத்திருக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அவசியம் எங்கள் மத்தியில் உணரப்பட வேண்டும். இதற்கான சிந்தனைச் செழுமையும், வளங்களும், வழிமுறைகளும் நம் பழந் தமிழ் மொழியிலும் பண்பாட்டிலும் சிதறிய முத்துக்களாய் பரவிக் கிடக்கின்றன.

இவற்றை நாம் நற்செய்தியின் ஒளியிலே புடமிட வேண்டும். இதன் தேவையினை உணர்ந்தவர்களாய் "யாதும் ஊரே யா-வரும் கேளிர்" என்ற பரந்த உலகப் பார்வையும், பல்லுயிர் நேயமும் கொண்டு விண்ணரசு மண்ணில் மலர எம்மையே அர்ப்பணிப்போம்.

# சுக நல சேவையில்....

(7ம் பக்கத் தொடர்ச்சி)

❖ சிறப்பு குழந்தைப் பராமரிப்பு அலகு, தீவிர சிகிச்சை சிறப்பு பராமரிப்பு பிரிவு

❖ இதய துடிப்புப் பதிவு, ஊடுகதிர், அல்ட்ராசவுண்ட் ஸ்கான் உள்ளிட்ட வழக்கமான பரிசோதனைகள்

❖ கிளினிக் - மருத்துவம், அறுவை சிகிச்சை, மகப்பேறு மற்றும் பெண்நோய், குழந்தைகள் மற்றும் உடற்பயிற்சி சிகிச்சை

**1985-2001 சுகாதார பராமரிப்பு 'அன்னாஹெய்ம்' - வெலிமட**

பதுளை ஒரு மறைமாவட்டமாக உருவாக்கப்பட்டவுடன் அப்போது ஆயராக இருந்த வணக்கத்துக்குரிய ஆயர் எட்மண்ட் பெர்ணாண்டோ அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அன்னாஹெய்ம் என்னும் சுகாதார பராமரிப்பு மருந்தகம் ஆரம்பிக்கப்பட்டு வெலிமட தேயிலைத் தோட்டங்களில் வாழும் மற்றும் வேலை புரியும் மக்களின் சுகாதார பராமரிப்பு நிலையமாக மாறியது.

**1987-2012 நடமாடும் சுகாதார பராமரிப்பை ஆரம்பித்தல்**

திருச்சிலுவை சுகநல நிலையமானது அந்நேரத்தில் காணப்பட்ட தேவையை நிறைவேற்றுவதற்காக புதிய திட்டத்தை ஆரம்பித்து கிராமப் புறங்களுக்கான ஒரு நடமாடும் சுகாதார பராமரிப்பு சேவையை சகோதரிகள் CEBEMO மற்றும் கியூடெக் நிறுவனத்தின் நிதியுதவியுடனும், யாழ்ப்பாணத்தின் மருத்துவபீட பல்கலைக்கழக சமூக சுகாதார உதவியுடனும் சகோதரிகள் வடமாகாணத் தின் தொலைதூர கிராமங்களை இந்திய அமைதி காக்கும் படை ஆக்கிரமித்தபோதும் அங்கு சென்று தம் சேவையை வழங்கினர். பின்னர் நடமாடும் சுகாதார அலகுகள் கிளிநொச்சி, திருகோணமலை, முருங்கன், மடு போன்ற இடங்களில் ஆரம்பிக்கப்பட்டன.

**1989-2009 இடம் பெயர்ந்தவர்களிடையே சுகாதாரப் பாதுகாப்பு**

யாழ்ப்பாண தீபகற்பத்தில் மக்கள் இடம்பெயர்வின் போது பலவித மான இன்னல்களை அனுபவித்த காலத்தில் திருச்சிலுவை சுகநல பராமரிப்பு நிலையமும் இடம்பெயர்ந்து பூநகரி, வவுனியா, கிளிநொச்சி, பரந்தன், முருங்கன் ஆகிய இடங்களிற்கு தம் சேவையை வழங்கியது. அக்காலங்களில் பயத்துடனும் ஏக்கத்துடனும் தனது சேவையினை பல்வேறு இடங்களில் வழங்கிய திருச்சிலுவைக் கன்னியர் பின் வரும் இடங்களில் தமது சுகநல பணியினை விரிவுபடுத்தினர்.

பரந்தன் பகுதியை சுற்றி நடமாடும் சுகாதார சேவையையும் ஆரம்பித் தனர். தற்போது மருத்துவ வசதிகள் கொண்ட சுகநல நிலையமாக விருத்தி யடைந்துள்ளது. 6. 2007 - புனித சூசையப்பர் சுகநல நிலையம், 'ஸ்ரெலா மாறிஸ்' திருகோணமலை

1995 இல் யாழ்ப்பாண வயோதிபர் இல்லத்திலிருந்த வயோதிபர்கள் இடம் விட்டு இடம் மாறி பல்வேறு இடங்களுக்கு சென்ற பின்னர் அவர்களின் புகலிடமாக திருகோணமலையிலுள்ள 'ஸ்ரெலா மாறிஸ்' என்னும் இல்லத்தை அமைந்தது.

**1. 1992 - மறைமாவட்ட வைத்தியசாலை 'சீலோம்' (SILOAM) மட்டக்களப்பு**

**2. 1995-2001- 'கனறா' வவுனியா**

நோர்வேயின் உதவியுடன் இடம் பெயர்ந்த கிராமங்களில் 18 நல நிலையங்களில் ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான ஊட்டச்சத்து உணவுத் திட்டம்

**3. 1998 - தியோடோசியஸ் சுகாதார நிலையம், கற்கிடந்தகுளம், வவுனியா**

கிராம சுகாதார ஊழியர்களுக்கான பயிற்சியையும் சுற்றியுள்ள கிராமங்களுக்கு நடமாடும் சுகாதார சேவையையும் CORDAID மற்றும் மெமிசா (MEMISA) நிதி உதவியுடன் முருங்கனில் ஆரம்பித்து பின்னர் அதனைச் சுற்றியுள்ள ஏறக்குறைய பத்து கிராமங்கள் வரை சென்றடைந்தது. இச்சுகாதார நிலையமானது தொடர்ந்தும் இற்றை வரை மருத்துவ உதவியினை கிராம மக்களுக்கு ஆற்றி வருகின்றது.

**4. 2003 - மருதமடு அன்னை யாத்திரை திருத்தலம்**

இத்திருத்தலத்துடன் இணைக்கப்பட்ட சிறிய வைத்தியசாலையானது யுத்த காலத்தில் MSF என்னும் அரச சார்பற்ற நிறுவனத்தின் மேற்பார்வையின் கீழ் மடுவைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு சுகாதார தேவைகளைப் பூர்த்தி செய்தது. காலப் போக்கில் மடுப்பிரதேசத்தை விட்டு வெளியேறியபோது திருச்சிலுவை அருட்சகோதரிகளிடம் ஒப்படைத்தது. யாத்திரிகர்களின் சுகாதார பராமரிப்பிற்கும் மேலாக சகோதரிகள் கிராமங்களுக்கான நடமாடும் சேவையையும் நடத்தி வருகின்றனர்.

**5. 2005 - திருச்சிலுவை சுகநல நிலையம் - பரந்தன்**

சகோதரிகள் கிளிநொச்சி மருத்துவமனை, மல்லாவி, ஜெயபுரம் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் MSF உடன் இணைந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு குறுகிய காலத்திற்கு பணியாற்றியதுடன் பின்னர் வெளிநோயாளர் பிரிவை ஆரம்பித்தனர். பரந்தன் பகுதியை சுற்றி நடமாடும் சுகாதார சேவையையும் ஆரம்பித்தனர். தற்போது மருத்துவ வசதிகள் கொண்ட சுகநல நிலையமாக விருத்தியடைந்துள்ளது.

**6. 2007 - புனித சூசையப்பர் சுகநல நிலையம், 'ஸ்ரெலா மாறிஸ்' திருகோணமலை**

1995 இல் யாழ்ப்பாண வயோதிபர் இல்லத்திலிருந்த வயோதிபர்கள் இடம் விட்டு இடம் மாறி பல்வேறு இடங்களுக்குச் சென்ற பின்னர் அவர்களின் புகலிடமாக திருகோணமலையிலுள்ள 'ஸ்ரெலா மாறிஸ்' என்னும் இல்லம் அமைந்தது. இவ்வில்லம் சுனாமியின் போது வெளிநாட்டு வைத்தியர்களுடன் இணைந்து தேவையான அத்தியாவசியத் தேவைகளை வழங்கியதுடன் தொடர்ந்தும் சேவையை வழங்குவதற்கு அவ்வளாகத்திலே சுகாதார நிலையத்தையும் அமைத்துள்ளது..

**2005 திருச்சிலுவை விஞ்ஞான பாட-சாலை - யாழ்ப்பாணம்**

எமது நீண்டகால விருப்பாகிய தாதியர் பாடசாலை 2005ம் வருடம் புரட்டாதித் திங்கள் நான்காம் நாள் யாழ்ப்பாணத்திலுள்ள திருச்சிலுவை வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டது. க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் மூன்று ஆண்டு கால டிப்ளோமா பயிற்சியை ஆங்கிலத்தில் நிறைவு செய்த பின் அவர்கள் வேறு தனியார் வைத்தியசாலைகளில் தாதியப் பணியை மேற்கொள்ள வாய்ப்பாக அமைவதோடு குடும்பங்களுக்கும், சமூகத்திற்கும் முக்கிய பங்களிப்பிற்கு வழிவகுக்கின்றது எமது ஸ்தாபகர்களின் அடிச்சுவடுகளின்படி பெண்களுக்கான வலுவூட்டல் அளிப்பதே இப்பயிற்சியின் நோக்கம் என்பதை நம்புகின்றோம்.

2014ம் வருடம் முதல் இப்பாடசாலை க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடையாத இளம் பெண்களுக்கு ஒன்பது மாத அடிப்படை தாதியர் பயிற்சி, முதியோர் பராமரிப்பு தாதியர் பயிற்சி, தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் சுகாதார உதவியாளர் போன்ற பல்வேறு பயிற்சிகளையும் வழங்குகின்றது.

இவ்வாறு 1930 ம் வருடம் வித்திடப்பட்ட இச்சுகாதாரப்பணியானது தன்னுடைய பரவலை வெளியேற்றம், அரசியல் கொந்தளிப்பு, இடப்பெயர்வுகள், கட்டட மற்றும் கருவிகளின் பாதிப்பு போன்ற பல புயல்களை எதிர்கொண்டு இன்று இலங்கையின் ஒன்பது மறைமாவட்டங்களிலும் பாக்கிஸ்தானில் ஓர் மறைமாவட்டத்திலும் தன் கிளைகளைப் பரப்பி சேவையை ஆற்றும் ஓர் விருட்சமாக திகழ்கின்றது.

இவ்வாறு 1953ம் ஆண்டில் அன்னை அலோசியாவால் ஆரம்பிக்கப்பட்ட அவசர தாதியர் பயிற்சியானது வளர்ச்சியடைந்து முதுகலைப்பட்ட மட்டத்தை அடைந்தது. 1995 இல் கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுகாதார அறிவியல் விஞ்ஞான பீடத்தில் தாதியர் பட்டப்படிப்பினை ஆரம்பிப்பதற்கான வேண்டுகோள் கோரப்பட்டபோது எமது அருட்சகோதரி ஒருவர் அப் பல்கலைக்கழக போதனாசிரியராக இணைந்து கொண்டார்.

இதேபோல் 2009ம் வருடம் தாதிய போதனாசிரியருக்கான வெலிசரவின் சர்வதேச சுகாதார அறிவியல் விஞ்ஞான நிறுவனத்திலிருந்து மற்றுமொரு கோரிக்கை வந்ததற்கிணங்க அருட்சகோதரிகள் சிலர் அங்கு கற்பித்தலை மேற்கொண்டனர். இதே ஆண்டில் இரு அருட்சகோதரிகள் கராச்சியிலுள்ள திருக்குடும்ப மருத்துவமனை தாதியர் பாடசாலையில் இணைந்து கொண்டனர்.

தற்போது திருச்சிலுவை அருட்சகோதரிகள் பல்வேறுபட்ட நிறுவனங்களில் தொழில்முறை தாதியர்களாக மற்றும் சுகாதார அறிவியல் கல்வியாளர்களாக திகழ்ந்து அருட்தந்தை தியோடோசியஸ் அவர்களின் தூர நோக்கினையும், எங்கு ஆசிரியர் பணி தேவையுள்ளதோ அங்கு சென்று பொருத்தமான சேவை செய்து எதிர்கால அன்னையர்களாக திகழவிருக்கும் இன்றைய கிராமப்புற இளம் பெண்கள் கல்வி கற்க வேண்டும் என்ற அன்னை பேர்ணாடாவின் பணிக்கூற்றையும் நிறைவேற்றுகின்றனர்.

இவ்வாறான எல்லாவற்றையும் நோக்கும்போது திருச்சிலுவை அருட்சகோதரிகளான எம் வாழ்வில் கடவுள் என்ன செய்திருக்கின்றார் என வினவும் போது, நம்முடைய தாய் அன்னை மரியாளுடன் இணைந்து 'கடவுள் நம் வாழ்வில் பல அற்புதங்களை செய்திருக்கின்றார், அவருடைய நாமம் தூயதாகும்' என்றே கூற முடியும்.

## முழங்காவில் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் பியன் வெனு உற்பத்தி நிலையம் திறப்பு விழா



திருக்குடும்ப கன்னியர் சபையினால் நிர்வகிக்கப்பட்டுவரும் பியன் உற்பத்தி நிலையத்தின் மீளமைக்கப்பட்ட கட்டிடமானது கடந்த ஆகஸ்ட் 10ஆம் திகதி சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டினைக் கருத்திற் கொண்டு நிறுவப்பட்ட இந் நிலையமானது மீளமைக்கப்படவேண்டிய நிலையினை உணர்ந்து, திருக்குடும்ப கன்னியர் சபையினால் முன்வைக்கப்பட்ட விண்ணப்பத்திற்கு இணங்க கனேடியத் தமிழர் மனிதாபிமானச் சங்கமானது (CTHA) இதற்கு நிதி அனுசரனை வழங்க முன்வந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு, கனேடியத் தமிழர் பேரவையின் (CTC) வசதிப்படுத்தலுடன் வடக்குக் கிழக்குப் பொருளாதார அபிவிருத்தி நடுவத்தினால் (NEED CENTRE) இச் செயற்றிட்டம் அமுலாக்கம் செய்யப்பட்டது. கட்டிடத் திறப்பு விழா நிகழ்வுகள் இறையாசீருடன் திருக் குடும்ப கன்னியர் சபையின் மாகாணத் தலைவி அருட்சகோதரி தியோபன் குரூஸ் அவர்களின் தலைமையில் இனிதே நடந்தேறின. மீளமைக்கப்பட்ட கட்டிடமானது திரு.சிவம் வேலுப்பிள்ளை (செயற்றிட்டப் பணிப்பாளர், கனேடியத் தமிழர் மனிதாபிமானச் சங்கம்) அவர்களினால் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. வடக்குக் கிழக்குப் பொருளாதார அபிவிருத்தி நடுவத்தின் இயக்குனர் சபை அங்கத்தவர்கள், பணியாளர்கள் உட்பட அருட்சகோதரிகள், பயனாளிகள் மற்றும் உள்ளூர் பிரதிநிதிகள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

இந் நிலையத்தின் வளர்ச்சியில் காலத்திற்குக் காலம் நிதி உட்பட பல்வேறு வழிகளில் அனுசரணை வழங்கிய அனைத்து நல்ல உள்ளங்களும், காலத்தின் தேவையை உணர்ந்து அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அருட்சகோதரிகளும் நன்றியுடன் நினைவு கூரப்பட்டனர்.முழங்காவில் திருக்குடும்ப கன்னியர்மட அருட்சகோதரிகள் இந் நிகழ்வுக்ளைச் சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பருத்தித்துறைப் பங்கில் விடுமுறை கால மறைக்கல்வி நிகழ்வும் ஒன்றுகூடலும்



இம்மாதம் 13ம் திகதி காலை 9மணி தொடக்கம் 1 மணி வரை மறைக்கல்வி மாணவர்களுக்கான விசேட ஒன்று கூடல் நிகழ்வு இடம் பெற்றது. இதனை பங்குத்தந்தையும், பங்கின் மறையாசிரியர்களும் சிறப்பாக ஒழுங்கமைத்து, நெறிப்படுத்தியமையும் ஒவ்வொரு விடுமுறை காலத்திலும் இவ் ஒன்று கூடல் இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இம்முறை ஒன்று கூடலின் போது "திருப்பலி வாழ்வு" என்ற தலைப்பில் கருத்துக்கள் பகிரப்பட்டது. மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து திருப்பலி பற்றிய விடயங்கள், கருத்துக்கள், அனுபவங்கள், படக்காட்சிகள் மூலம் வழங்கப்பட்டது. தொடர்ந்து குழு விளையாட்டுக்களும் இடம்பெற்றன. இதில் 250 மாணவர்கள் கலந்து நன்மை பெற்றார்கள். இந்நாள் மிகவும் மகிழ்ச்சியான நன்மை நிறைந்த நாளாக அமைந்தது.

## இலங்கை புனித வின்சென்ற் டி போல் தேசிய சபையினர் யாழ் ஆயரைச் சந்தித்தனர்



புனித வின்சென்ற் டி போல் சபையினரின் சர்வதேச உப தலைவர் சகோ.ஜோசப் பாண்டியன் அவர்களும் ஆசியப் பிராந்திய செயலாளர் சகோ. ஜோண்சன் மற்றும் இலங்கை புனித வின்சென்ற் டி போல் தேசிய சபையின் ஆன்ம இயக்குனர் அருட்பணி றோய் கிளாரன்ஸ் அடிகளாரும், யாழ் மறைமாவட்ட மத்தியசபை ஆன்ம ஆலோசகர் அருட்பணி R.C.X. நேசராஜா அடிகளுடன் யாழ் மறைமாவட்ட புனித வின்சன் டி போல் மத்திய சபையினரும் 28.08.2019 அன்று யாழ் ஆயரைச் சந்தித்தனர்.

யாழ்ப்பாண வறிய மக்களின் நிலைபற்றியும் வறிய மாணவர்களின் கல்வி நிலையை முன்னேற்றுவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

## சக்கோட்டையில் இளையோர் கருத்தமர்வு



சக்கோட்டைப் பங்கின் அனைத்து இளைஞர் யுவதிகளுக்குமான வருடாந்த கருத்தமர்வு பங்குத்தந்தை ம.கான்ஸ்போவர் அடிகளாரால் ஒழுங்குபடுத்தப்பட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை 25.08.2019 அன்று சக்கோட்டை புனித சவேரியார் ஆலயத்தில் காலை 9.00 மணியில் இருந்து மதியம் 1.00 மணிவரை இடம்பெற்றது.

இந்தக் கருத்தமர்வை "ஞானதீபம்" இளையோர் திறன்விருத்தி பணி மைய இயக்குனர் அருட்தந்தை பிலிப் றஞ்சனகுமார் அ.ம.தி அடிகளாரும் வளவாளர்களும் சிறப்பான விதத்திலே நெறிப்படுத்தியிருந்தார்கள். இந்தக் கருத்தமர்வானது கிறிஸ்துவே சிறந்த தலைவர் எனும் மையக்கருவில் இடம்பெற்றது. இயேசுக் கிறிஸ்து கொண்டிருந்த தலைமைத்துவப் பண்புகளை நாம் ஏற்கையில் அது எம் வாழ்வில் எத்தகைய நன்மைகளை அள்ளித்தரும் என இந்தக் கருத்தமர்வின் மூலம் உணரக்கூடியதாக இருந்தது.

கருத்துப்பகிர்வுகள், குறும்படங்கள், விளையாட்டுக்குழு அமர்வுகள் என மாறுபட்ட விதங்களில் இக்கருத்தமர்வு இடம்பெற்றதால் பங்கேற்ற இளையோரின் பங்களிப்பு நிறைவாக இருந்தது. 90ற்கும் மேற்பட்ட இளையோர் இதில் பங்கு கொண்டமை சிறப்பிற்குரியது. இளையோருக்குரிய சிறப்புத் திருப்பலியோடு இக் கருத்தமர்வு இனிதே நிறைவுபெற்றது.

## "அரைகுறை விசுவாசத்துடன் வாழ்வதை விடுத்து இறைவனில் முழுமையான நம்பிக்கை கொள்வோம்" - திருத்தந்தை



ஆயரும் மறைவல்லுநருமான புனித அகுஸ்தின் திருநாள் கடந்த வாரம் கொண்டாடப்பட்டதையொட்டி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்ட செய்தியில், கிறிஸ்தவர்களாகிய நாம் அரை குறையான ஆர்வத்துடன் வாழ்வதிலிருந்து நம்மை இறைவன் காத்தருள வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

"அரைகுறை முயற்சிகளுடன் வாழ்ந்து, நம் அன்பின் ஆர்வத்தைத் தணித்து, மிதமான கிறிஸ்தவர்களாக இருக்கும் நிலையிலிருந்து நம்மைக் காத்தருள, இறைவனிடம் அருள் வேண்டுகிறோம்" என்ற சொற்களை, திருத்தந்தை தன் செய்தியில் பதிவு செய்திருந்தார்.

## மறை ஆசிரியர் ஆண்டு விழா

யாழ் மறை மாவட்டத்திலுள்ள அனைத்துப் பங்குகளிலும் பணியாற்றுகின்ற மறை ஆசிரியர்களை ஊக்கப்படுத்தும் முகமாக வருடாந்தம் நடாத்தப்படும் மறை ஆசிரியர் ஆண்டு விழா இவ்வருடம் 07.09.2019 அன்று கொண்டாடப்படவுள்ளது.

காலை 09.30 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் ஆயரின் தலைமையில் திருப்பலியும் தொடர்ந்து 11.15 மணிக்கு "பாதுகாவலன்" மண்டபத்தில் நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

பங்குகளில் பணியாற்றுகின்ற அனைத்து மறையாசிரியர்களையும் இவ்விழாவில் பங்குகொள்ள அனபுடன் அழைக்கின்றோம்.



நோர்வே சர்மத சகவாழ்வு பிரதிநிதிகளும் தேசிய கரித்தாஸ் நிலையப் பிரதிநிதிகளும் யாழ் கியூடெக் கரித்தாஸ் சர்வமதக் குழுத் தலைவர்களை சந்தித்தபோது

## செயலற்றுப்போகும் இறை நம்பிக்கை வாழ்வுக்கு உரமிட புனித செபஸ்தியாரின் பரிந்துரையை நாடுவோம்

- அருட்பணி.எஸ்.ஏ.றொஷான்



மண்ணித்தலை புனித செபஸ்ரியார் ஆலய வருடாந்தப் பெருவிழா கடந்த 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இப்பெருவிழாத் திருப்பலியை தலைமையேற்று ஒப்புக்கொடுத்த புனித வளன் அச்சக முகாமையாளரும் பாதுகாவலன் ஆசிரியருமாகிய அருட்பணி எஸ்.ஏ. றொஷான் அடிகள் தமது மறையுரையில் "இன்று நம்பிக்கையாளரின் இறை நம்பிக்கை மிகவும் செயலற்ற நம்பிக்கையாகவே உள்ளது. புனித பவுல் கூறுவது போல் செயலற்ற விசுவாசம் பயனற்றது. புனித செபஸ்ரியார் மறைபோதகராக இருந்து மறைசாட்சியானார். அவரைப் போல் நாமும் மறைபரப்பாளராக மாறவேண்டும். அதை வலியுறுத்தியே தற்காலத் திருத்தந்தை வருகின்ற ஐப்பசி மாதத்தை மறைபரப்பின் சிறப்பின் மாதமாகப் பிரகடனப்படுத்தியுள்ளார்" என தமது மறையுரையில் குறிப்பிட்டிருந்தார். இவ்வால்யப் பரிபாலகர் அருட்பணி J.A.அருள்தாசன் அடிகளாரின் ஒழுங்கமைப்பில் சிறப்பாக நடைபெற்ற இவ்விழாவில் பூநகரி பிரதேச செயலர், தவிசாளர், யாழ் மாநகர முதல்வர் ஆகியோரும் பங்கெடுத்தனர். பாசையூர், குருநகர் பகுதிகளிலிருந்து கடல் வழியாகப் பல இறைமக்கள் கூடிவந்தமை குறிப்பிடத்தக்கது.



யாழ்ப்பாணம் கியூடெக் கரித்தாஸ் உத்தியோகத்தர்கள் 27.08.2019 நுவரேலியா திருச்சிலுவைக்கன்னியர்மடத்தில் வெளிக்களத் தரிசிப்புக்காக சென்றபோது

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல: 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2019ம் ஆண்டு புரட்டாதி மாதம் 1ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.